பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | புரட்டாதி 04, புதன்கிழமை 20.09.2017 | கதிர் 318

உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

# மாகாண சபைகள் தேர்தலை முடக்குவதற்கு தேர்தல் திருத்தச் சட்டம்

## இன்றே விவாதித்து நிறைவேற்றி முடிக்க அரசு கங்கணம்

கொழும்பு, செப்ரெம்பர் 20

அரசமைப்புக்கான திருத்தம் மூலம் மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போட முயன்ற அரசு, உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் அந்த எத்தனம் சறுக்கிப்போக, அந்தத் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்குப் புதிய வழிவகைளை நாடியிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் ஒன்றை இன்றே நாடாளுமன்றில் எடுத்து, அதை இன்றே நிறைவேற்றுவதன் மூலம் அத்தேர்தலை உடனடியாக நடத்த முடியாத சட்ட நிலைமையை ஏற்படுத்த அரசு தீர்மானித்துவிட்டது.

அதன்படி 1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்று இன்று நாடாளுமன்றத்துக்கு வருகின்றது.

பக்கம் 18 »

### மாகாணத் தேர்தல் திருத்தச் சட்டம்

## கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஹக்கீம், ரிஷாத், மனோ ஆட்சேபனை

கொழும்பு,செப்.20

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் ஒன்று இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என நேற்று நாடாளுமன்றக் கட்சித் தலைவர் கூட்டத்தில் கூறப்பட்ட போது அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன் ஆகியோர் கடுமையாகக் குழம்பிப் போய் விட்டனர் என்று தெரியவருகின்றது.

இந்தச் சட்டமூலம் அமைச்சரவையில் அங்கீ

பக்கம் 18 »

## காணாமலாக்குவதைக் குற்றமாக்கும் சட்டமூலம் காணாமற்போகும் அறிகுறி

கொழும்பு,செப்.20

வலிந்து காணாமற்போகச் செய்தலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டமூலமே காணாமற்போகின்ற அறிகுறி ஏற்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பலவந்தமாகக் காணாமலாக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் பிரகடனம் மற்றும் அது தொடர்பான சட்டமூலத்தின் மீது நாடாளுமன்றத்தில் நாளை விவாதம் நடைபெறவிருந்தது.

ஆனால் கூட்டு எதிரணி மற்றும் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்புகளின் கடுமையான எதிர்ப்பை அடுத்து இந்த முயற்சியிலிருந்து அரசு பின்வாங்கி விட்டதாகத்

பக்கம் 18 »

## மாகாண தேர்தல் சட்டத்தை கூட்டமைப்பு ஆதரிக்கும்

இன்று அரசு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும் மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் முடிவையே பெரும்பாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆனால், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று காலை கூடிய பின்னர்தான் முடிவு என்னவென்பது தெரிய வரும் எனக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்

பக்கம் 18 »

# உள்ளூராட்சி தேர்தல்களும் அந்தரத்தில்!

## இன்னும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் வரவேண்டுமாம்

கொழும்பு,செப்.20

உள்ளூராட்சித் தேர்தல்கள் ஜனவரி 20 ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் – அதை நடத்துவதும் சிக்கலில் மாட்டியிருப்பதாகக் கொழும்பில் தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவித்தன.

பக்கம் 18 »

## தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம், அதிருப்தி

கொழும்பு, செப்.20

வலிந்து காணாமலாக்கப்படுதலைக் குற்றமாக்குதல் தொடர்பான சட்டமூலத்தை விவாதிப்பதில் இருந்து இலங்கை அரசு கடைசி நேரத்தில் பின்வாங்கியிருக்கின்றமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்திருக்கின்றது.

பக்கம் 18 »

## இடைக்கால அறிக்கை நாளை வெளியாகிறது

கொழும்பு,செப்.20

புதிய அரசமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை நாளை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கை குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றம் நாளை காலை 9 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் அரசமைப்புப் பேரவையாகக் கூடவிருக்கின்றது.

பக்கம் 18 »

## உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து 20ஆவது திருத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு,செப்.20

எதிர்பார்க்கப்பட்ட படி உயர்நீதிமன்றத் தீர்ப்பை அடுத்த அரசமைப்புக்குத் தான் கொண்டு வந்த இருபதாவது திருத்தத்தை அரசு கைவிட்டது.

இந்தத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத் தின் தீர்ப்பை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

இந்தத் திருத்தத்தை சட்டமுறையாக்குவதனால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அனுமதியும் பெறப்பட

பக்கம் 18 »

## டெனீஸ்வரன் எதிர் முதல்வர் வழக்கு: உயர் நீதிமன்ற முடிவு 3ஆம் திகதி!

கொழும்பு,செப்.20

வடமாகாண அமைச்சர் பதவியிலிருந்தது தம்மை முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரன் வெளியேற்றிய முறைமை தவறு எனத் தெரிவித்து அந்தப் பணிப்புக்கு எதிராக இடைக்காலத் தடை விதித்தல் உட்படப் பல்வேறு நடவடிக்கை உத்தரவுகளை வழங்கக் கோரி

பக்கம் 18 »

## சுமந்திரனைக் கொல்ல முயற்சி: 5 சந்தேக நபர்களுக்கும் பிணை!

### யாழ்.மேல்நீதிமன்றம் நேற்று அனுமதி

யாழ்ப்பாணம்,செப்.20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

இந்த வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு

பக்கம் 18 »

## இங்கு மாற்றுத் தலைமைக்கான முயற்சியில் பிரிட்டன் புகலிடவாதி

### 'தமிழ் பேசும் மக்கள் முன்னணி' என்ற பெயரில் அமைப்பாம்


யாழ்ப்பாணம்,செப்.20

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக இங்கு புதிய தலைமை ஒன்றை உருவாக்கும் முயற்சி மும்முரமாக எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

'தமிழ் பேசும் மக்கள் முன்னணி' என்ற பெயரில் ஒரு கட்சியை ஆரம்பிக்கும் ஏற்பாடுகள் குறித்தே மும்முரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் –

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



இடைக்கால அறிக்கையும் காணாமல் போனாலும் போகும்...!

# அரசு பதிலளிக்காமல் விட்டால் சாகும் வரை உண்ணாவிரதம்

வவுனியா, செப். 20

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு அரசு பதிலளிக்காவிட்டால் சாகும் வரைஉண்ணாவிரதப்போராட்டம் நடத்தப்படும் என வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவுகள்தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று 208 ஆவது நாளை எட்டியுள்ளநிலையில்வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்!

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

அரசிடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 208 வது நாள்களாக எமது கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.அந்தவகையில் எந்த தீர்வுமின்றி போராட்டம் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில் எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் அடையாள உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.




அதற்கும்அரசுபதிலளிக்காத பட்சத்தில் அரசிற்கு சிறிது கால அவகாசம் வழங்குவதுடன் பதில் கிடைக்காத பட்சத்தில் போராட்டத்திலிருக்கும் தாய்மார்களால் சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டம் அறிவிக்கப்படும். 6 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தொடர்ச்சியாக தெரு ஓரத்திலிருந்து எமது பிள்ளைகளுக்காகப்போராடிவருகிறோம்.

எமது மக்களுக்கும் புலம்பெயர்ந்துள்ள எங்கள் தாயக உறவுகளுக்கும் எமது போராட்டத்தை பலப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கிறோம் என தெரிவித்தார்.(க-100)

## திருநெல்வேலியில் நேற்றுமுதல் மாபெரும் விவசாயக் கண்காட்சி!




யாழ்ப்பாணம், செப். 20

வடமாகாணத்தின் மாபெரும் விவசாயக் கண்காட்சி நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய திணைக்களத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கலந்து கொள்ள விருந்தார்.

எனினும், சில தவிர்க்க முடியாத காரணங்களால் முதலமைச்சர் வருகை தராத நிலையில், அவருக்கு பதிலாக வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இயற்கை விவசாயத்தை முன்னிறுத்தி இந்தக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியானது எதிர்வரும் 23ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடமாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் உள்ளிட்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(க)

## மாகாண சபையில் நுழைந்த வேலையில்லாப் பட்டதாரிகள்!

குருநாகல், செப். 20

வடமத்திய மாகாண சபை அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மாகாண சபை வளாகத்தில் நுழைந்த வேலையில்லா பட்டதாரிகள் அமைதியின்மையில் ஈடுபட்டனர்.



இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மாகாண சபை அமர்வுத் தினமான நேற்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வேலையில்லாப் பட்டதாரிகளின் கலகத்தை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.



இதன்காரணமாக அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

மார்ச் மாதமளவில் வேலையில்லா பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தி டிப்ளோமா ஆசிரியர்கள், அபிவிருத்தி அதிகாரிகள், பட்டதாரிகள் ஆசிரியர்கள் போன்ற வெற்றிடங்களை நிரப்புவதாக அதிகாரிகள் கூறியிருந்தாலும் அது பொய்யான வாக்குறுதியாகிவிட்டதாக வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் அசங்க ரூபசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் வடமத்திய மாகாண முதலமைச்சருடன் பேச்சு நடத்துவதற்கு வேலையில்லா பட்டதாரிகள் சார்பில் குழுவொன்றுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

## வவுனியா குளங்களின் அபிவிருத்தியை பார்வையிட்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்!

வவுனியா, செப். 20

வவுனியா வேப்பங்குளம் மற்றும் பட்டைடக்காடு குளங்களை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் பார்வையிட்டார்.

வவுனியாவில் குளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும், எதிர்கால விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்தும் அப்பிரதேச விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் அவர்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.





குளங்களின் திருத்த வேலைகளை அவதானித்த பின் கருத்து தெரிவித்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான்-

எமது நல்லாட்சி அரசாங்கத்தால் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் 5 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பட்டானிச்சூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் மற்றும் பட்டடைக்காடு குளங்கள் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப் படுகிறது. அத்துடன் இப் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இக்குளங்கள் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்படும்.

இனநல்லுறவு அமைச்சின் கீழ் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்ட ஒரு செயலணியினூடாக வட பகுதிக்கு பெரிய நிதி ஒதுக்கப்பட்டு கிராமங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(க-100)

# பத்திரிகைகள் நடுநிலையைப் பேணி செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும்!

## 'உதயன்' நிர்வாக இயக்குநர் சரா எம்.பி. அறிவுரை

கொழும்பு, செப் 20

"பத்திரிகைகள் தடைகளைத் தாண்டி இரண்டு பக்கமும் செய்திகளை உறுதிப்படுத்தி, சரியா, பிழையா என்பதைக் கண்டறிந்து நடுநிலையாகச் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும்."

– இவ்வாறு கூறினார் 'உதயன்' நாளிதழின் நிர்வாக இயக்குநரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

நேற்றுக் காலை கொழும்பில் 'சுடர்ஒளி' நாளிதழின் அலுவலகத்தில் அதன் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கு கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு உரையாற்றிய அவர், கடந்த கால சர்வாதிகார ஆட்சியாளர்கள் தமிழ் அச்சு ஊடகத்தைக் கொழும்பில் நடத்துவதற்குத் தடையாக இருந்தனர் என்றார்.

எதிர்ப்புக்களைத் தாண்டி பத்திரிகைகள் நடுநிலையாகச் செய்திகளைப்பிரசுரிக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

சர்வாதிகார ஆட்சி நடக்கும் போது அதில் இருந்தஓரிருவர் இதனை (இந்தப் பத்திரிகையை) யாழ்ப்பாணத்தில் போய் நடத்தும் படியும், கொழும்பில் நிறுத்தும் படியும் வலு இராஜதந்திரமுறையில் என்னைக் கேட்டுக் கொண்டனர்.

நான் பொதுவாக யாருக்கும் பெரிதாகப் பதில் கூறுபவன் அல்லன்.

எதிர்ப்புகளுக்கு நாங்கள் முகம் கொடுத்து, எங்களுடைய பத்திரிகையில் என்ன சொல்லப் போகின்றோமோ அதைச் சொல்லி, அதனை மக்கள் உணருவார்கள், சரியாக முடிவு செய்வார்கள் என்ற அடிப்படையில் சிந்தித்து, வழங்கினோம்.

வழக்குகளுக்குப் போக இடமளிக்காமல், தனிப்பட்ட முறையில் தாக்காமல், இரண்டு பக்கமும் கேட்டு, விசாரித்து, அறிந்து, எது சரி, எது பிழை என்று பார்த்துச் செய்தி வெளியிட வேண்டும். அதுதான் பத்திரிகை இயல். ஊடக முறைமை.

ஒரு பக்கம் கேட்டு விட்டு, அதை எழுதி விட்டுப் பின்னர் மன்னிப்புக் கேட்பது அழகாக இருக்காது.

தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்கவும் கூடாது. – என்றார் அவர்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., இந்தியத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி ரமேஷ் பாபு உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



## கல்விமாணி நெறி பரீட்சைக்கான விண்ணப்ப படிவம்

யாழ்ப்பாணம், செப்.20

தேசிய கல்வி நிறுவன 2013/2015 ஆம் கற்கை ஆண்டு கல்விமாணி பயிற்சி நெறி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பபடிவங்களை எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச கற்கை நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியை மேற்கொள்ளும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் யாழ்.மத்திய கல்லூரி, கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி ஆகிய பிரதேச கற்கை நிலையங்களில் தமது விண்ணப்பபடிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியுமென பிரதேச கற்கை நிலையங்களின் இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## 50 ஆயிரம் மாணவர்கள் புகை பிடிக்கின்றனராம்

சுமார் ஐம்பதாயிரம் பாடசாலை மாணவர்கள் புகை பிடிக்கின்றனர் என புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபையின் தலைவர் டொக்டா பாலித அபேகோன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் சுமார் ஐம்பதாயிரம் பாடசாலை மாணவர்கள் புகைபிடிக்கின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது. 15 முதல் 17 வயதான பாடசாலை மாணவர்களே அதிகளவில் புகை பிடிக்கின்றார்கள். புகை பிடித்தலை மேலும் வீழ்ச்சியடையச் செய்யும் வழிமுறை ஒன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. – என்றார் அவர்.

# எழிலன் சரணடையவில்லையாம்: நீதிமன்றத்தில் ஜெனரல் தெரிவிப்பு!

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் உட்பட ஆள் கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்ட ஆறுபேரும் இருக்கவில்லை என ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாணக்க குணவர்த்தன தெரிவித்தார்.

எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் உட்பட ஆறு பேர் தொடர்பான ஆள்கொணர்வுமனுக்கள்நேற்றுமுல்லைத்தீவுநீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எழிலன் சார்பில் அவரது மனைவியான வடமாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன், கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, கந்தசாமி பொன்னம்மா உள்ளிட்ட பன்னிரண்டுபேர் இந்த ஆள்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது எதிராளி சார்பில் பதிலளிக்கப்பட்டது.

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டோர் தொடர்பிலான ஆவணங்களின்படி எழிலனுடைய பெயர் தமது பெயர்ப்பட்டியலில் இல்லை எனவும், எனவே அவர் இராணுவத்திடம் சரணடையவில்லை என்ற கருத்துப்படவும் மேஜர் ஜெனரல் தெரிவித்தார்.

லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் வைத்து இராணுவத்திடம் எனது கணவனை ஒப்படைத்தோம் எனத் தெரிவித்துள்ள காணாமல் ஆக்கப்பட்டுள்ள எழிலனின் மனைவியான வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், நீதிகோரிய தனது போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

# யாழில் சர்வதேச சுற்றுலாத்தினம் செப்.25ஆம் திகதி அனுஷ்டிப்பு

## நகரில் விழிப்புணர்வு ஊர்வலமும் நடக்கும்

யாழ்ப்பாணம், செப்.20

சர்வதேச சுற்றுலாத் தினம் வடமாகாண சுற்றுலாத்துறை அமைச்சினால் எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வை வடமாகாண முதலமைச்சரும், சுற்றுலாத் துறை அமைச்சருமான சி.வீ.விக்னேஸ்வரன் தொடக்கி வைக்க உள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் பிரதானமாக நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் 25 ஆம் திகதி சர்வதேச சுற்றுலாத் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இதனடிப்படையில் வடமாகாண சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் சர்வதேச சுற்றுலா தினம் வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் கொண்டாடப்படுகின்றது.

இது தொடர்பாக நேற்று வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றிருந்தது. அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியவை வருமாறு:-

வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் பல சுற்றுலா பயணிகள் வடமாகாணத்திற்கு வருகிறார்கள்.

அவர்கள் நேரே யாழ்ப்பாணம் வந்து நயினாதீவு, நாக விகாரையையும், மாதகல் சம்பில்துறையில் உள்ள விகாரையையும் பார்த்துச் செல்கிறார்கள்.

இங்கே வேறு சுற்றுலாத் தலங்கள் இல்லை என்பதே அவர்கள் அறிந்திருக்கும் விடயமாகும். இதனை மாற்றியமைக்கும் நோக்கில் வடமாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேலும் வடமாகாண சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான தந்திரோபாயத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும்அதுகுறுகியகாலத்தை மையப்படுத்தியிருப்பதால் நீண்டகால திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

அதனைச் செய்வோம். இவற்றினை அடிப்படையாக கொண்டு சர்வதேச சுற்றுலாத் தினத்தை வடமாகாணத்தில் கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்.நகரில் இருந்து நகரை சுற்றிச் சுற்றுலா தொடர்பான விழிப்புணர்வுப் பவனி நடத்தப்படும்.

இதன்போது வடமாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் அடையாளப்படுத்தப்பட்ட வடமாகாணத்தின் வரைபடம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன், வடமாகாண சுற்றுலா வழிகாட்டி ஏடும் வெளியீடு செய்யப்படும். – என்றார்.

# வீதி, வீதியாகப் பிச்சைப்பாத்திரம் ஏந்தி நிதி சேகரிப்போர் பிச்சைக்காரர்கள்தாம்!

## பௌத்த பிக்குமார் அல்லர் என்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப்.20

வீதி வீதியாகப் பிச்சைப்பாத்திரம் ஏந்தி நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில்பிச்சைக்காரர்கள் மாத்திரமே ஈடுபடுவார்கள் என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கடுமையான விமர்சனமொன்றை முன்வைத்துள்ளார்.

'சில்' அனுட்டானத் துணி விநியோக மோசடி வழக்கில் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பல்பிட்ட ஆகியோர் குற்றவாளிகளாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை செலுத்துவதற்காக பௌத்த பிக்குமார் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளமையை சரத் பொன்சேகா கடுமையாக விமர்சித்துள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இந்த விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும்கருத்துவெளியிட்ட சரத் பொன்சேகா, பௌத்த பிக்குமார் உணவுக்காக மாத்திரமே பிச்சைப் பாத்திரம் ஏந்த பௌத்த தர்மம் இடமளிக்கின்றது.

பிக்குமார் நிதி விடயங்களில் ஈடுபடுகின்றமையையும் தடை செய்துள்ளது.வீதி வீதியாக நிதி சேகரிப்பவர்கள் பிச்சைக்காரர்களே தவிர பிக்குமார் அல்லர். அவர்கள் அவ்வாறு செய்ய முடியாது.

வண.எல்லே குணவங்ச தேரோ பௌத்த தேரருக்கு பொருந்தாத தரங்கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவதால் அதே



வார்த்தைகளில் நானும் பதிலடி கொடுத்துள்ளேன்.

மற்றப்படி பௌத்த பிக்குமாரை அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. கடந்த ஆட்சியில் தான் அவ்வாறு பிக்குமார் அவமானப்படுத்தப்பட்டார்கள். அச்சுறுத்தப்பட்டார்கள். அவ்வாறான வியாதி எங்களுக்கு இல்லை. – என்றும் அமைச்சர் சரத் பொன்சேகா தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# இருபதாவது திருத்தத்துக்குப் பதிலாக மாகாண தேர்தல் திருத்தச் சட்டம்

அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட இருபதாவது திருத்த விவகாரம் அரசுத் தரப்புக்கும் தோல்வி, எதிரணிக்கும் தோல்வி என்ற மாதிரி முடிவடைகின்றமைதான் துரதிஷ்டம்.

'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்த கதை' என்று சொல்லுவார்கள். அது மாதிரியாகியிருக்கின்றது இந்தவிவகாரம். - அரசுக்கு மட்டுமல்ல, எதிரணிக்கும்தான்.

'இருபதாவது திருத்தத்தைக் கடுமையாக எதிர்த்தோம். அது தவறு என்றோம். அதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு விட்டது.' - என்று கூட்டு எதிரணி கூடப் பெருமைப்பட முடியாது.

ஏனென்றால் இருபதாவது திருத்தம் வர முடியாமல் போனமை யால், அரசுத் தரப்பு நாடியிருக்கும் மாற்று வழிவகை அதிலும் விட மிக மோசமானதாக - நாட்டுக்கும் கூட்டு எதிரணிக்கும் பாதிப்பாக - அமையக் கூடியதாக வந்து விட்டது.

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை நாடாளு மன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றினால் போதுமானது என உயர்நீதிமன்றம் பரிந்துரைத்திருந்தால், அதனடிப்படையில் அதை அரசு நிறைவேற்றும் சூழலுடன், இரண்டு முக்கிய விடயங்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

ஒன்று - அந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு சரியாக ஒரு வருட காலத்தில் சகல மாகாண சபைகளும் கலைக்கப்பட, உடனடியாகத் தேர்தல் நடத்தப்படக் கூடிய நிலைமை இருந்தி ருக்கும். அதற்கேற்ப, மாகாணங்கள் தோறும் தொகுதி எல்லை நிர்ணயம் செய்யும் பணி, அரசமைப்பு திருத்த ஏற்பாடுகளுக்கு அமையத் துரிதமாகவும் கட்டாயமாகவும் உரிய காலத்தில் முடிக் கப்பட்டிருக்கும்.

இரண்டு - அந்தத் தேர்தல் வரை எல்லா மாகாண சபைகளும் கலைக்கப்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலமே நிர்வகிக்கப்படுகின்றமை தொடர்ந்திருக்கும். அதாவது இம்மாத இறுதியோடு காலாவதியாகும் மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலமும் தேர்தல் நடக்கும்வேளை வரை - அந்த ஓராண்டு காலத்துக்கு - நீடிக்கப்பட்டிருக்கும். அங்கு ஆளுநர் ஆட்சி வந்திருக்காது.

இப்போது, அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்துக்கு சர்வஜனவாக்கெடுப்பு அவசியம் என்ற முட்டுக்கட்டையை உயர்நீதிமன்றம் போட்டு விட்டதால் தேர்தல்களைத் தள் ளிப்போடும் அரசின் விருப்பத்துக்கு அதனால் நெருக்கடி ஏற்பட, அரசு மாற்று வழியை நாடியிருக்கின்றது.

மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தைத் திருத்தும் சட்ட மூலம் ஒன்றை இன்றே விவாதித்து உடன் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சட்ட மூலம் மாகாண சபைத் தேர்தல்கள் தொகுதி வாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் சேர்ந்த கலப்பு முறையில் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தும்.அதற் கான தொகுதி எல்லை நிர்ணயம் ஆறு மாதத்தில் நடைபெற வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தும்.

ஆனால், இந்தச் சட்ட மூலம் இன்று நிறைவேறுமானால், அதில் கூறப்பட்டபடி தொகுதிவாரி தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகும் வரை எந்த மாகாண சபைகளுக்கும் தேர்தல் களை தேர்தல் ஆணையத்தால் நடத்த முடியாது.

அந்த, ஆறு மாதக் காலக்கெடு ஆறு வருடங்களுக்கு நீடித் தாலும் யாரும் ஒன்றும் செய்ய முடியாது.

அத்தோடு, இருபதாவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக இதனைச் செய்ய முற்பட்டிருந்தால் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவை அரசு தேடவேண்டியிருந்திருக்கும்.

ஆனால், இப்போது சாதாரண தேர்தல் திருத்தச் சட்ட மூல மாக இதைக் கொண்டு வருவதால் அதனை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் அரசினால் நிறைவேற்றிவிட லாம்.

அத்தோடு, இப்போது பதவிக்காலம் முடிவடையும் மூன்று மாகாண சபைகளினதும் நிர்வாகம் - இனி எப்போதும் தேர்தல் நடக்குமோ அப்போது வரை - ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் வரப்போகின்றன.

அடுத்த ஆண்டு செப்ரெம்பருக்கு முதல் மாகாணங்கள் தோறும் தொகுதிகள் பிரிக்கப்பட்டு, உரிய தேர்தல் முறைமை கள் ஏற்படுத்தப்படாவிட்டால், வடக்கு மாகாண சபை உட்பட மேலும் மூன்று மாகாண சபைகள் ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் வந்து விடும்.

ஆக, இருபதாவது திருத்தத்தினால் தனக்கு செய்ய முடியாமல் போனதை இப்போது குறுக்கு வழியில் சாதாரண சட்டம் மூலம் அரசு செய்யப் போகின்றது.

இருபதாவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் போய் தேர்தல் திருத்தச் சட்டம் அந்த இடத்துக்கு வருகின்றது. அதன் மூலம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் தள்ளி வைப்பதில் அரசு வெற்றி கண்டுவிட்டது.

# பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகள் விரைவில் முடிவுக்கு வந்து விடும்!

## அமைச்சர் சுவாமிநாதன் கூறுகிறார்

கொழும்பு, செப். 20

பயங்கரவாத தடைச்சட் டத்தின் கீழ் கைது செய்யப் பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளைத் துரிதப்படுத் துவதற்கு, சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரி வித்துள்ளார்.

சிறிலங்கா பவுண்டேசனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய சிறைக்கைதிகள் நாள் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் தடுத்து வைக்கப்பட் டுள்ள 73 பேரின் வழக்குகளை துரிதமாக முன்னெடுப்பதற் கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என சட்டமா அதிபர் என்னிடம் உறுதியளித் துள்ளார்.

இந்த வழக்குகளை நாளாந்த அடிப்படையில் விசாரிக்கு மாறு தாம் அழுத்தம் கொடுக் கப்போவதாகவும், ஏதாவது வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்படுவதாக இருந்தால் அது இரண்டு வாரங்களுக்கு மேற்பட்டதாக இருக்காது என்றும் சட்டமா அதிபர் தெரி வித்துள்ளார்.

எனவே, இந்த வழக்குகள் விரைவாக முடிவுக்கு வரும் என்றும் அமைச்சர் சுவாமி நாதன் தெரிவித்துள்ளார்.

# படையினருக்கு நவீன உபகரணங்கள்: பதில் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்!

கொழும்பு, செப். 20

படையினருக்குத் தேவை யான நவீன உபகரணங்களை வழங்கி தேசியப் பாதுகாப்பை மேலும் உறுதி செய்ய நடவ டிக்கை எடுக்கப்படும் என பதில் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித் துள்ளார்.

பியகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத் தில் பங்கேற்று கருத்துத் தெரி வித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவப் படையினருக்கு தேவையான நவீன உபகர ணங்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கி



தேசிய பாதுகாப்பை மேலும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா விற்கு விஜயம் செய்துள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் பாதுகாப்பு பதில் அமைச்சராக கடமையாற்றுமாறு ஜனாதிபதி எனக்கு பணிப்புரை விடுத்தார். என் மீது கொண்ட நம்பிக்கை யினால் பதில் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதி பதி வழங்கியுள்ளார்.

எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவதே எனது இலக் காகும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குற்றச் செயல் களில் ஈடுபடும் நபர்களை கைது செய்யும் பொறுப்பு பொலிஸாரைச் சாரும்.

அவ்வாறு வடக்கிலும், கிழக் கிலும் குற்றச்செயல்களில் ஈடுபட்ட பெரும் எண்ணிக் கையிலானவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர். இவ்வாறான விடயங்கள் தேசியப்பாது காப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாது எனச் சுட்டிக்காட் டியுள்ளார்.

# மதுவரித் திணைக்களத்தின் முதல் பெண் ஆணையாளர்!

கொழும்பு, செப். 20

இலங்கை மதுவரி திணைக்களத்தின் முதலாவது பெண் ஆணையாளராகத் ஹெலன் மீகஸ்முல்ல தனது கடமை களைப் பொறுப்பேற்றார்.

நுவரெலியா மாவட்ட செயலாளராக பதவி வகித்த ஹெலன் மீகஸ்முல்லவை மதுவரி திணைக்களத்தின் ஆணையா ளராக நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து அவர் உத்தியோக பூர்வமாக தனது கட மைகளைப் பொறுப்பேற்றார்.

# மியன்மார் அகதிகள் குறித்து இலங்கை அரசு விளக்கம்!

கொழும்பு, செப். 20

மியன்மாரின் ரோஹிங்கியா அகதிகள் தொடர்பிலான இலங்கை அரசின் நிலைப் பாடு தெளிவுபடுத்தப்பட் டுள்ளது.

மியன்மாரின் ரோஹிங்கியா அகதிகள் தொடர்பில் முன்னர் அனுசரித்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று அரசு வலியுறுத்தியுள்ளது.

அந்த நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் பல குழுக்கள் பல்வேறு நடவடிக் கைகளில் ஈடுபட்டு வந்தன. இவை பற்றி குடிவரவு மற்றும் குடியகல்வுக்குப் பொறுப்பான அமைச்சு விளக்கமளித்துள் ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மியன்மாரில் இருந்து தப்பி வந்த 55 ரோஹிங்கியா முஸ்லிம்களை கடற்படையினர் காப்பாற்றி, ஐக்கிய நாடுகளின் அகதிக ளுக்கான அமைப்பிடம் ஒப்படைத்திருந்தார்கள்.

இவர்கள் அனைவரும் 2012 ஆம்ஆண்டு ஜுலை மாதம் நாட்டிலிருந்து வெளியேறி யிருந்தார்கள். 2013ஆம் ஆண் டில் 170 பேர் காப்பாற்றப்பட் டார்கள். இவர்களும் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையிலிருந்து புறப் பட்டுச் சென்றார்கள்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் 30 பேரை கடற்படை காப்பாற் றியிருந்தது. இவர்கள் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானி கராலயத்திடம் ஒப்படைக்கப் பட்டார்கள்.

இந்த அகதிகள் விவகாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட வரம்புகளுக்கு உட்பட்டவாறு செயற்பட்டுள்ளதாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## நாளை

21.09.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம்: அத்தம் பி.இ. 12.52 வரை
திதி: பிரதமை மு.ப. 11.02 வரை
சுபநேரம்: 7.32 – 9.02
இராகுகாலம்: 1.32 – 3.02

# ஸ்ரீலங்கா படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி சூடான் இராணுவப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு!



கொழும்பு, செப். 20

சூடான் இராணுவத்தின் கூட்டுப்படைப் பயிற்சியின் மேஜர் ஜெனரல் இஸாம் முகமட் ஹசன் கரோர் தலைமையிலான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சூடான் பிரதிநிதிகள், இராணுவ படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த சந்திப்பில் சூடானின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் இராணுவப் படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி பாதுகாப்பு தொடர்பான முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட இந்த சந்திப்பின் போது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சாத்தியக்கூறுகளை விசாரித்து இலங்கை இராணுவத்தின் சர்வதேச நிகழ்வுகளின் பங்கேற்றல் குறித்து மேஜர்ஜெனரல் அமல் கருணாசேகர விளக்கினார்.

சூடான் பிரதிநிதிகளின் கூட்டுப் பயிற்சி பணிப்பாளர் மேஜர் ஜெனரல் இசாம் முகமட் ஹஸன் ஹரோர், பிரிகேடியர் அசாட் முகமட் ஹசீப் குபாரா, பிரிகேடியர் ஒஸ்மான் இஸ்மாயில் சிரக் இட்ரிஸ் மற்றும் கோர்ணல் டெரிக் மொக்டர் முகமட் இளமின் உள்ளடக்கப்பட்ட குழுவினர் வருகை தந்தனர்.

இந்த நிகழ்வை நினைவு கூரும்வகையில் இவர்களிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டன.

மேலும், இந்தப் பிரதிநிதிகள் இராணுவப் பயிற்சிப் பணியகத்தின் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் விஜித்த ரவிப்பிரியவை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் பயிற்சிப் பணியகத்தின் கேர்ணல் எஸ் கஸ்தூரிமுதலி மற்றும் லெப்டினன்ட் கேர்ணல் எம் எஸ் கே சல்காது போன்ற அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பேச்சு வார்த்தை தோல்வி அடைந்ததையடுத்து மின்சார சபை ஊழியர்கள் தொடர் போராட்டம்!

கொழும்பு, செப். 20

தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை வழங்காத நிலையில், தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாக, மின்சார சபைப் பணியாளர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதன்படி அவர்களின் போராட்டம் 7 ஆம் நாளாகவும் தொடரவுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் தொழிற்றுறை அமைச்சர் டபிள்யு.டி. ஜே.செனவிரத்னவுடன், தொழிற்சங்கத்தினர் பேச்சுநடத்தியபோதும், அந்தப் பேச்சு தோல்வி அடைந்தது.

இந்தப் போராட்டத்தின் காரணமாக, அப்புத்தளை, புத்தளம், அம்பாறை உள்ளிட்ட சில பகுதிகளில் மின்விநியோகத் தடை ஏற்பட்டுள்ளது.

ஆனால், அவற்றில் பெரும்பாலானவை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை என்று, மின்சாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான மின்விநியோகத் தடைகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

## திறந்த பொருளாதாரம் அவசியம்; இதுவே ஜே.ஆரின் கோட்பாடாகும்!

### கூறுகிறார் பிரதமர்



கொழும்பு, செப். 20

உலக பொருளாதாரத்தின் அனுகூலங்களைப் பெற வேண்டுமானால் திறந்த பொருளாதாரம் வேண்டுமென்பது முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கோட்பாடாக இருந்தது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் 111 ஆவது ஜனனதினநிகழ்வு கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தனமத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையை ஆசியாவின் பொருளாதாரக் கேந்திர நிலையமாக மாற்ற அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தன திட்டம் வகுத்திருந்தார். ஆனால், யுத்தத்தின் காரணமாக அவரது இலக்குகளை அடைய முடியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977 ஆம் ஆண்டில் ஏற்படுத்திய பொருளாதார மலர்ச்சி இலங்கையில் துரித அபிவிருத்திக்கு வித்திட்டது.

அவரின் அபிவிருத்தித் திட்டங்களில் மகாவலிதிட்டத்தை விரைவாக பூர்த்தி செய்தமை, ஸ்ரீஜயவர்த்தனபுரகோட்டையை தலைநகரமாக அபிவிருத்தி செய்தமை போன்றவை பாராட்டத்தக்கவை என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் நினைவுப் பேருரை நிகழ்த்திய திருமதி சரோஜினி வெத்தசிங்ஹ, புலமைச் சொத்தைப் பாதுகாக்கும் நிறுவனத்தை ஸ்தாபிக்க அமரர் ஜெயவர்த்தன பாடுபட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வன்னியில் தமது நிலைகளை பலப்படுத்துகிறது இராணுவம்!

### மக்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 20

இராணுவத்தினர் தொடர்ந்தும் தமது நிலைகளை வன்னியில் பலப்படுத்தி வருகின்றனர் என பிரதேச மக்களால் கருத்துவெளியிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - பூநகரி - மன்னார் வீதியில் வேரவில் சந்தியில் இருந்து வடக்கே 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் படை அணிகள்பயிற்சி அணிவகுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன.

கடந்த சனிக்கிழமை இந்தப் பயிற்சி இடம்பெற்றுள்ளது.

இந்தப் பயிற்சியின் அணி வகுப்பு நடவடிக்கை பிரதான வீதிகள் ஊடாகவும் இடம் பெற்றது. இதில் படையின்பல பிரிவுகள் பங்குபற்றியிருந்தன.

இந்த நிலையில், இராணுவத்தினர் வன்னியில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





வன்னியில் படையினர்தமது முகாம்களில்புதியகட்டுமானங்களை மேற்கொண்டு அவற்றைப் பலப்படுத்தி வருகின்றனர் எனவும், அதேவேளை, காட்டுப் பகுதிகளில் புதிய முகாம்களும் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## போலிப் பிரசாரங்களினால் மக்கள் ஏமாற மாட்டார்கள்!

### அமைச்சர் சஜித் பிரேமதாச கூறுகிறார்!

கொழும்பு, செப். 20

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான போலிப் பிரசாரங்களால் மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வீரகெற்றிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலிந்து காணாமல் போகச் செய்தலைத்தடைசெய்வதற்கு நல்லாட்சி அரசு சட்டங்களை வகுத்து வருகிறது. ஆனால், சில சக்திகள் மக்களை ஏமாற்றி திசைதிருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இது சாத்தியப்பட மாட்டாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

# சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெறும் இலக்கில் இருந்து ஒதுங்கிவிட மாட்டோம்!

## கிழக்கு முதலமைச்சர் திட்டவட்டம்



மாகாணசபை கலைக்கப்பட்டாலும் சிறுபான்மைச் சமூகங்களுக்கான அரசியல் உரிமைகளையும், அபிவிருத்திகளையும் அடைந்து கொள்ளும் எமது பயணத்தில்இருந்துஒருபோதும் ஒதுங்கிவிடமாட்டோம்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

சமகால அரசியல் நடப்புகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள், 'மாகாண சபை கலைக்கப்படப் போகிறது' என பீரங்கிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மாகாணசபை ஆட்சி எப்போதாயினும் கலைக்கப்படவேண்டியதுதான் என்பதை இவர்கள் சொல்லித்தான் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும்என்பதில்லை.

சின்னத்தனமான அரசியல்வாதிகள்சிலர், எப்படிப் பேசுவது என்று தெரியாமல் உளறுகின்றனர். உணர்ச்சி வசப்படும்படி வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி மக்களை உசுப்பேற்றி விடுகிறார்கள்.

குறைமதிக் கிறுக்கர்களான இத்தகைய அரசியல்வாதிகள், சிறுபான்மையினருக்கான அரசியல் விடிவு என்ன? அதனை அடைந்து கொள்வதற்கான வியூகங்களை எப்படி வகுக்க வேண்டும்? சமூக மக்களை ஒற்றுமைப்படுத்தி எப்படி வழிநடத்த வேண்டும்? என்ற அடிப்படை அறிவே இல்லாமல் கொக்கரிக்கின்றனர். அதனால், நாமும் சிறுபான்மையினம் என்ற வகையில் வெட்கப்பட வேண்டி உள்ளது.

நல்லதோ, கெட்டதோ மக்களுக்கு உண்மையைச்சொல்ல வேண்டும். அதுதான் ஒரு சிறந்த மனிதப் பண்பு. சிறந்த அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி மக்களுக்கு வலியுறுத்த வேண்டி உள்ளது. சிறுபான்மைச் சமூகங்களின் ஒன்றுபட்ட அரசியல் விடுதலைக்காக நாம் குரலெழுப்புவதை, இந்த சோரம்போகும் குறைமதி அரசியல்வாதிகளால் தடுத்து நிறுத்திவிட முடியாது.- என்றார். (ச)

# கரையோரக் கடல் வளப் பாதுகாப்பு வாரம் ஒந்தாச்சிமடக் கடற்கரையில் அனுஷ்டிப்பு!





கரையோர கடல் வளங்களின் பாதுகாப்பு வாரமும், கரையோரத்தூய்மைப்படுத்தலும் தேசிய நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்டத்தின்களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் கடற்கரையில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மகாவலி சுற்றாடல் அமைச்சின் கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கரையோரம்பேணல் மூலவள முகாமைத்துவத் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கரையோரம் பேணல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஆர்.ரஜீகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்ணம், கடல்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கரையோரம் பேணல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் புத்திக ஜயவீர ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடல் வளத்தைப் பாதுகாக்கும் வகையில் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இறுதி வாரம், தேசிய கரையோர மற்றும் கடல் வளங்களின் பாதுகாப்பு வாரமும் கரையோர தூய்மைப்படுத்தல் நிகழ்வு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்போது கடற்கரைப்பகுதி தூய்மைப்படுத்தப்பட்டு அழகுபடுத்தப்பட்டன. (ச)

## காத்தான்குடியில் மரக் கடத்தல் ஒருவர் கைது!

மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதியில் பெறுமதியான நாகை மரக் குற்றிகளை சட்ட விரோதமான முறையில் கடத்திச் சென்ற நபர் ஒருவரை காத்தான்குடிப் பொலிஸார் கைது செய்தனர்.

இதன்போது 10 நாகை மரங்கள் மற்றும் மரத்தைக் கடத்தப் பயன்படுத்திய லொறி என்பன கைப்பற்றப்பட்டன.

காத்தான்குடிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது. (ச)

## பெண் மீது துஷ்பிரயோக முயற்சி: கந்தளாயில் ஒருவர் கைதானார்!

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்டபகுதியில் பெண் ஒருவரைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர்ஒருவரேகைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்ணின் கணவன் வெளிநாடு சென்றுள்ளார். இந்த நிலையில், தனிமையில் வசித்துவந்த மேற்படிபெண்ணை அந்த இளைஞர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

## மட்டு. மீனவருக்கு அதிஷ்டம்: 2 ஆயிரம் கிலோ சுறாக்கள் சிக்கின!



மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த ஆழ்கடல் மீனவர் ஒருவருக்கு இரண்டாயிரம் கிலோ கிராமுக்கு மேற்பட்ட சுறா மீன்கள் பிடிபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கடந்த சில நாள்களாகக் கடலில் தங்கியிருந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில், அவருக்கு நேற்று அதிகளவான சுறா மீன்களும், ஒரு தொகை சிறு மீன்களும் பிடிப்பட்டுள்ளன.

நேற்றைய விலை நிலைவரப்படி பிடிபட்ட சுறாமீன்களின் பெறுமதி பத்து லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# முதலாம், 2ஆம், 3ஆம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஒக்ரோபர் 2 இல் ஆரம்பம்!

## கிழக்குப் பல்கலை பிரதி உபவேந்தர் அறிவிப்பு

கிழக்குப் பல்கலைக்கழக முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களைச் சேர்ந்த மாணவர்களின் அனைத்துக் கல்வி நடவடிக்கைகளும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும்.

-இவ்வாறு பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் வைத்திய கலாநிதி கே.ஈ. கருணாகரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக இறுதி யாண்டு மாணவர்களின்கல்வி நடவடிக்கைகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 மாதங்களாக இடம்பெற்றுவந்த அசாதாரண சூழ்நிலை முடிவுக்கு வந்துள்ளது. இந்த நிலையில், மத்தியஸ்த குழு மற்றும் மாணவர் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையில் கடந்த 8ஆம்திகதி எட்டப்பட்ட உடன்பாட்டின் காரணமாக பல்கலைக்கழக கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைமீள ஆரம்பிக்க முடிந்தது.-என்றார். (ச)

# மற்றொரு திருத்தத்தை முன்வைக்கிறது அரசு!



கொழும்பு, செப். 20
20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறாது என்றும், எனினும், இன்றைய அமர்வில் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்ட வரைவை ஐ.தே.க. முன்வைக்கவுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே, திட்டமிட்டபடி, 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாது என்று அவை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கான முடிவு ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, 20 ஆவது திருத்தச்சட்ட வரைவின் சட்டபூர்வத் தன்மை தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் கரு ஜெயசூரிய நாடாளுமன்றத்தில் அறிவிப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, மாகாணசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்ட வரைவை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது என்று, தனது பெயரை வெளியிட விரும்பாத ஐ.தே. கவின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும், வகையில், மாகாண சபைத் தேர்தல் திருத்த யோசனையை இலங்கை அரசு கடந்த ஜூலை மாதம், வர்த்தமானியில் வெளியிட்டிருந்தது.

மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், குறைந்த பட்சம் 30 வீத பெண் வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தில் திருத்தச் செய்வதற்கு இந்தயோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கும் பிரகடனம் தொடர்பில் பின்வாங்கியது அரசு!



கொழும்பு, செப். 20
பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேச பிரகடனம் தொடர்பான விவாதம் நாளை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாது என்று இலங்கை அரசு தெரிவித் துள்ளது.

இந்தப் பிரகடனம் நாளை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அன்றைய நாள் இது குறித்து விவாதிக்கப்படாது என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடந்த ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவு குறித்தும் விவாதம் நடத்துவதில்லை என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க் புறப்பட முன்னர், கூட்டு எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது, பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேச பிரகடனம் தொடர்பான விவாதம், நாளை நடத்தப்படாது என்று ஜனாதிபதி மைத்திரி தம்மிடம் உறுதியளித்திருந்தார் என்று தினேஷ் குணவர்த்தன தகவல் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்கு கொண்டு வரமாட்டேன்!

## சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்



கொழும்பு, செப். 20
தனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்கு கொண்டு வரும் நோக்கம் தனக்குக் கிடையாது என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்குள் நுழைவதற்கு நான் ஊக்குவிக்கிறேன் என சில சமூக ஊடகங்களிலும், இணையங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனது மகனையோ, மகளையோ நான் அரசியலுக்குத் தயார்ப்படுத்தவில்லை.

அரசியல்வாதிகளை நான் தெரிவு செய்ய முடியாது. மக்கள் தான் தெரிவு செய்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பங்களாதேஷ் தூதுவருடன் அமைச்சர் ஹக்கீம் சந்திப்பு!



கொழும்பு, செப். 20
இலங்கைக்கான பங்களா தேஷ் தூதுவர் ரியாஸ் ஹமிதுல்லாஹ் நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்தார்.

அமைச்சரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது இருவருக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடல் இடம் பெற்றது.

# இலங்கை திரைப்படத் துறைக்கு பங்காற்றியவர்களுக்கு கௌரவிப்பு!









கொழும்பு, செப். 20
இலங்கைதிரைப்படத் துறைக்கு அளப்பரிய சேவையாற்றி ஊக்கமளித்த இயக்குநர்களுக்கு பாராட்டு வழங்கும்நிகழ்வுநடைபெற்றது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் மாலைஇடம்பெற்ற இந்த நிகழ்வின் போது இலங்கை திரைப் படத் துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய பிரபல சினிமாத்துறையைச் சேர்ந்த பிரபல கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ்பீரீஸ், சுகத்தபால செனரத் யாப்பா, திஸ்ஸலியன சூரிய, கீர்த்தி ஸ்ரீபெரேரா ஆகியோர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

அரச தகவல் திணைக் களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன் சூரியவின் அழைப்பிற்கு அமைவாக இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, நிதி மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ணா ஆகியோரின் தலைமையில் இந்த வைபவம்நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் ஊடகத் துறை பிரதி அமைச்சர் லசந்த அழகிய வண்ண மற்றும் அரச தகவல் திணைக்களப் பணிப் பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய ஆகியோரின் பங்களிப்புடன் இவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது அரச திரைப் படக்கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டு விருது பெற்ற விவரண திரைப் படம் டிஜிட்டல் மயப் படுத்தப்பட்டு பாதுகாப்பதற்காக தேசிய சுவடிகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

சுவடிகள் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி நதிரா ரூபசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக இவற்றை அரசதிணைக்களப்பணிப் பாளர் நாயகம் கையளித்தார்.

அரச திரைப்படப்பிரிவால் இதுவரையில் பாதுகாக்கப்பட்டு வைத்திருந்த பெறுமதிமிக்க விவரண மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட திரைப் படங்கள் இணையத்தளத்தில் வெளியிடும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

கரிக்கட்டுக்குளத்திலும்

**வவுனியா பிரதேசத்தில்-**

தவசிக்குளம், யங்கன்குளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** மடுக்கரை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

(இ)

## தினசரி ராசி பலன் 20 .09.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 04 ஆம் நாள் அமாவாசைத்திதி. பகல் 10.59 மணி வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம் - உத்தரம் இரவு 11.02 மணி வரை. பின்னர் அத்தம். அமிர்த சித்தயோகம். ராகுகாலம்- பி.ப. 12.03 மணி முதல் 01.34 மணி வரை. சுபநேரம் பி.ப 04.32 மணி முதல் 06.02 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை.

பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். நெடுந்தூரப் பயணத்தால் மனமகிழ்ச்சி உண்டாகும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

**ரிஷபம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். தேக சுகம் சிறப்படையும். தொழிலில் மேன்மை உண்டாகும்.

**மிதுனம் :** கவலையான நாள். பணவரவு குறையும். சிலருக்கு குடும்பத்தைப் பிரிந்து வேறு இடத்தில் தொழில் புரிய வேண்டிய நிலை ஏற்படும். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**கடகம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

**சிம்மம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் தாராளமாகப் புழங்கும். சகோதர உறவு பலப்படும். வியாபாரத்தில் துரித வளர்ச்சி காணப்படும். சுயதொழில் ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி :** இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் குடிகொள்ளும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**துலாம் :** அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். கடன் வாங்க அலைவார்கள். சிலர் குடியிருக்க வாடகை வீட்டை நாடுவார்கள். தேக ஆரோக்கியம் குன்றும்.

**விருச்சிகம் :** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமையும் கல்வியில் முன்னேற்றமும் உண்டாகும். எதிர்பாராத பணவரவுகளும் வந்து சேரும்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழில் ரீதியான இடையூறுகள் தோன்றி மறையும். குடும்பத்தில் நிம்மதியற்ற சூழ்நிலை உருவாகும்.

**மகரம் :** நன்மையான நாள். பணபலம் பெருகும். செல்வாக்கு அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளும் வியாபார ஒப்பந்தங்களும் கைகூடும். எடுத்த தொழில் முன்னேற்றம் உண்டாகும்.

**கும்பம்:** துயரானமான நாள். பொருளாதார நிலையில் நெருக்கடி காணப்படும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மீனம் :** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். எடுத்த காரியம் வெற்றியடையும். இதுவரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3, ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# வீரசிங்கம் கல்லூரியின் குறைகளை விரைவில் தீர்த்து வைப்பேன் - அங்கஜன்



சாவகச்சேரி, செப்.20

தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அபிவிருத்தி கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு கலந்துரையாடினார்.

இதன் போது பாடசாலையில் மைதானம் இல்லாத காரணத்தால் மூன்று வருடங்கள் விளையாட்டுப் போட்டி நடத்தவில்லை என பாடசாலை அதிபர் அம்பலவாணர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார்.

அருகில் உள்ள ஒரு தனியார் காணியை தாம் கொள்வனவு செய்யத் தயாராக உள்ள போதிலும் சிறு இழுபறி நிலை காணப்படுவதாகவும் அதனை சுமுகமான முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்தக் காணியை கொள்வனவு செய்தால் மைதானப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், பாடசாலைக்கு நிழல் பிரதி இயந்திரங்கள் மற்றும் கணினிகள் தேவை எனவும் கட்டடம் ஒன்று புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையில் காணப்படுவதாகவும் கோரிக்கை விடுத்தனர்.

காணிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் குறிப்பிட்ட அங்கஜன் நிழல் பிரதி இயந்திரங்கள், கணினிகளை தான் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பேன் எனவும் பாடசாலையின் அபிவி ருத்தி தொடர்பாக உரிய அமைச்சுடன் பாடசாலை அதிபர் கலந்துரையாட நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(இ-21)

# வவுனியாவில் கேரளா கஞ்சா கொண்டு சென்றவர் கைது!

வவுனியா, செப். 20

வவுனியா, பாரதிபுரம் பகுதியில் கேரளா கஞ்சாவை கொண்டு சென்ற நபரொருவர் நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வவுனியா, சாம்பல்தோட்டம் பகுதியிலிருந்து பாரதிபுரம் நோக்கி நபர் ஒருவர் பயணித்த போது, வீதியில் கடமையிலிருந்த பொலிஸார் அந்த நபரை மறித்து சோதனையிட்ட போது உடைமையுடன் மறைத்து வைத்திருந்த நிலையில் கேரளா கஞ்சா பொதி கண்டு பிடிக்கப்பட்டது.

இதனடிப்படையில் குறித்த 34வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் எங்கிருந்து கஞ்சாவை பெற்றுக்கொண்டார் என்ற அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா பொலிஸ் நிலையத்தினூடாக வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

(க-100)

# தகவல் தொழில்நுட்பம்; வர்த்தகர்களுக்கு பயன்மிக்க கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.20

தகவல் தொழில்நுட்பம் அதிக வளர்ச்சியடைந்துள்ள தற்போதைய நிலையில் ஒரு வர்த்தக நிலையம் எவ்வாறு தன்னை நவீன முறையில் மேம்படுத்த முடியும் என காட்சிப்படுத்தல் மூலம் தெளிவூட் டக்கூடிய கண்காட்சி-

எதிர்வரும் 29,30 மற்றும் ஒக்ரோபர் முதலாம் திகதி ஆகிய மூன்று தினங்களும் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வர்த்தக நிலையங்கள் மட்டுமன்றி எந்த வோர் அலுவலகத்துக்கும் மிகவும் பயனுள்ளதாக இக் கண்காட்சி அமையும் என எதிர்பார்க்கப்படுவதால், அனைத்து வர்த்தகர்களும் இதில் பங்குபற்றி பயன் பெற வேண்டும் என்று யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது. மேலதிக விவரங்களை யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# யாழ்ப்பாண தொழில்நுட்ப கல்லூரியில் நாளை தொழில்கல்வி கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.20

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி அமைச்சின்கீழ் உள்ளநிறுவனங்களை இணைத்து நடத்தும் தொழில் கல்வி கண்காட்சி நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழில்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இலங்கை சமுத்திர பல்கலைக்கழக பிராந்திய நிலையம் என்பன கலந்துகொள்ளவுள்ளன.(இ)

# மகோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.20

நல்லூர் நாவலர் வீதி சீரடி சாயி மந்தரின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம் பெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(இ)

# யாழ். வண்ணை பெருமாள் கோயிலில் வெள்ளியன்று கொடி

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மகோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் பிற்பகல் 3 மணிக்கு மானம்பூ உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் பிற்பகல் 12.30 மணிக்கு மகா யாக கும்பாபிஷேகம் மாலை கொடியிறக்கம் என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை காசி யாத்திரை, மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் மறுநாள் மாலை திருவூஞ்சல் பூந்தொட்டி உற்சவம் என்பன இடம்பெறும்.

(இ)

காலைக்கதிர்
Kalaikkathir





# 2009ஆம் ஆண்டில் ஜெனீவாவில் சிறிலங்கா வெற்றி பெற்றது எப்படி?

நான்காம் கட்ட ஈழப்போர் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த பின்னர், முதற் தடவையாக மே 27, 2009 இல் ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா பெற்றுக்கொண்ட இராஜதந்திர வெற்றி தொடர்பாக சன்ஜ டீ சில்வா ஜயதிலக எழுதிய Mission Impossible: Geneva என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மே 19, 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர், சிறிலங்கா அரசாங்கத்தால் வெற்றி கொள்ளப்பட்டதானது சிறிலங்காவைப் பொறுத்தளவிலும் பிராந்திய மற்றும் அனைத்துலக சமூகத்தைப் பொறுத்தளவிலும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க இராணுவ வெற்றியாகவே தற்போதும் நோக்கப்படுகின்றது. ஆனால், இந்த வெற்றி ஜெனீவாவில் மேற்குலக சக்திகள் மீது பதிவு செய்ய ப்பட்ட ஓர் இராஜதந்திர வெற்றியாக இன்னமும் அடையாளங்காணப்படவில்லை.

சிறிலங்கா ஜெனீவாவில் இராஜதந்திர வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு அப்போதைய சிறிலங்காவிற்கான ஐ.நா. தூதுவர் தயான் ஜயதிலக மற்றும் கொழும்பு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற கோட்பாட்டு மாற்றங்கள் போன்றன காரணமாக இருந்தன.

சன்ஜ டீ சில்வா ஜயதிலகவினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள நூல், இவருடைய கணவர் தயான் ஜயதிலக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்காவிற்கு ஆதரவான தீர்மானம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எத்தகைய நகர்வுகளை முன்னெடுத்தார் என்பதை வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக சிறிலங்காவில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துமாறும் போர்க் குற்றங்கள் தொடர்பாக சிறிலங்கா பொறுப்புக்கூற வேண்டும் எனவும் மேற்குலக நாடுகளால் சிறிலங்கா மீது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட அதேவேளையில் இத்தீர்மானத்தை சிறிலங்காவிற்குச் சாதகமான தீர்மானமாக மாற்றுவதற்கு தயான் ஜயத்திலக எத்தகைய நடவடிக்கைகளைக் கைக்கொண்டிருந்தார் என்பது 'Mission Impossible: Geneva எனும் நூலின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகள், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் போன்றவற்றுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில், சிறிலங்காவிற்குச் சார்பான தீர்மானம் ஒன்றை ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியது. அதாவது சிறிலங்கா பயங்கரவாதம் மற்றும் பிரிவினை வாதத்திற்கு எதிரான யுத்தத்தை வெற்றி கொண்டுள்ளதாகவும் போருக்குப் பின்னான நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சிறிலங்கா அரசு அனைத்துலக சமூகத்தின் உதவியை நாடி நிற்பதாகவும் சுட்டிக்காட்டி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் போன்ற சக்தி வாய்ந்த நாடுகள் சிறிலங்காவிற்கு ஆதரவான தீர்மானத்தை எதிர்த்த போதிலும் 29 நாடுகள் இதற்கு ஆதரவாகவும் 12 நாடுகள் இதற்கு எதிராகவும் ஆறு நாடுகள் வாக்குகளை அளிக்காத நிலையிலும் சிறிலங்காவிற்கு ஆதரவான தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு தயான் ஜயதிலகவின் மனவுறுதி, வலிமை மற்றும் ஆக்கத்திறன் போன்றவையே காரணமாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஜயதிலக இடதுசாரி அரசியல் பின்னணியைக் கொண்டிருந்த போதிலும் சிறிலங்காவிற்குச் சார்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு காரணமாக இருந்ததன் மூலம் உலக வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

இவ்வாறானதோர் இடதுசாரி அரசியல் பின்னணியைக் கொண்டிருந்த ஜயதிலக தனது இராஜதந்திர எண்ணங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தியிருந்தார். இவரால் அமுல்படுத்தப்பட்ட மூலோபாயங்களின் மூலம் சிறிய நாடுகள் கூட உலகின் சக்தி வாய்ந்த நாடுகளை எதிர்த்து ஐ.நா. பேரவையில் சிறிலங்காவிற்கு ஆதரவாக வாக்குகளை அளித்தன என்கின்ற விடயத்தை 'சமச்சீரற்ற இராஜதந்திரம்' என்கின்ற பாடவிதானத்தின் கீழ் சில பல்கலைக்கழகங்களில் தற்போது கற்பிக்கப்படுவதாக திருமதி தயான் ஜயதிலக எழுதிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2009ல் இறுதிக் கட்ட, யுத்தம் இடம்பெற்ற போது, பாதுகாப்பு சபையின் செயற்பாட்டிற்காக மேற்குலக நாடுகள் நியூயோர்க்கில் கூட முயற்சித்தன. ஆனால் ரஷ்யா, சீனா போன்ற வீட்டோ அதிகாரத்தைக் கொண்ட நாடுகள் இதற்கு அனுமதிக்கவில்லை.

இதன் பின்னர் மேற்குலக நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்காவில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாகவும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கான சிறப்புக் கூட்டத் தொடர் ஒன்றை ஏற்பாடு செய்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையை மீட்டெடுப்பதற்கான முயற்சி மற்றும் சிறிலங்காவின் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு பங்களிப்புச் செய்தல் போன்ற விடயங்கள் இச்சிறப்புக் கூட்டத்தொடரில் விவாதிக்கப்பட்டது.




இச்சிறப்பு விவாதத்தின் போது இந்தியா, சிறிலங்காவின் ஆதரவாக இருந்தது. பூகோள கால மீளாய்வு செயற்றிட்டத்திற்கு அப்பால் குறித்த நாடொன்றின் பெயரிலும் குறித்த நாடொன்றின் மீது தீர்மானம் இயற்றுவது தொடர்பில் இந்தியா தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், மேற்குலக நாடுகளால் சிறிலங்காவிற்கு எதிராக முன்னெடுக்கப்படவிருந்த தீர்மானத்தை தோல்வியடையச் செய்வதற்கான மூலோபாயம் ஒன்றை கலாநிதி ஜயதிலக வகுத்துக்கொண்டார். தயான் ஜயதிலக தனது இடதுசாரி அரசியல் பின்னணியின் மூலம் குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வரலாற்றிலும் அரசியலிலும் இடம்பிடித்ததுடன் அணிசேரா நாடுகளைச் சேர்ந்த ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதரவை இவர் பெற்றுக்கொண்டார். இதன்மூலம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 47 உறுப்பு நாடுகளைக் கொண்டிருந்த ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்கக் கூட்டணியின் ஆதரவை ஜயதிலக பெற்றுக் கொண்டார்.

அந்தநேரத்தில் சிறிலங்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடாக இல்லாததால் இதற்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு ஜயதிலக கடும்பிரயத்தனத்தை மேற்கொண்டார். கொழும்பிலிருந்த வெளியுறவுச் செயலகம் இது தொடர்பில் அச்சுமுற்றது.

ஏனெனில், சிறிலங்காவிற்கு ஆதரவு தருவதாகக் கூறிய பல நாடுகள் மேற்குலக சக்திகளால் விடுக்கப்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நிர்ப்பந்தங்களைத் தொடர்ந்து தமது ஆதரவைப் பின்வாங்கிக் கொண்டன. இதனால், இந்த நாடுகளுடன் இடைவிடாத பேச்சுக்களை நடத்தி சிறிலங்காவிற்கு ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு ஜயதிலக பல்வேறு நகர்வுகளை முன்னெடுத்தார்.

தயான் ஜயதிலகவின் அணுகுமுறை அசாதாரணமானது. இவர் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மேற்குலக இராஜதந்திரிகள் உட்பட பல்வேறு தரப்பினரிடமும் பேச்சுக்களை நடத்தினார். இவர் சிறிலங்காவின் நலன்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிக்குத் தேவையான நல்ல விடயங்களைச் சேகரித்தும் மற்றவற்றை நிராகரித்தும் கொண்டார். ஊடக மாநாடுகளிலும் பங்கெடுத்தார். இவர் மேற்குலக இராஜதந்திரிகளிடமும் வெளிப்படையாக சில கருத்துக்களைக் கேட்டுக் கொண்டார். எடுத்துக் காட்டாக ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் 'அனைத்துலக சமூகத்திற்காக' உரையாற்றுவதாகத் தெரிவித்த போது, அவர் ஆபிரிக்க- ஆசிய - இலத்தீன் அமெரிக்கக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறாரா அல்லது ஆசியப் பிராந்தியத்தின் சக்தி வாய்ந்த நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனாவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறாரா என தயான் ஜயதிலக வினவினார். ஜயதிலகவின் கேள்வியால் தடுமாறிய குறித்த உயர் அதிகாரி இறுதியாக தான் ஐரோப்பிய ஒன்றியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகத் தெரிவித்தார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

வெளிநாட்டின் மீது பரந்தளவில் போரையும் அமெரிக்காவிற்குள் சமூக எதிர்புரட்சியையும் விரிவாக்க தீர்மானமாக உள்ள பெருநிறுவன மற்றும் நிதியியல் தன்னலக்குழுக்களின் ஓர் அரசாங்கமாக, ட்ரம்ப் நிர்வாகத்தின் நிஜமான குணாம்சம் மற்றும் சமூக அடித்தளங்களை, ஜனநாயகக் கட்சியும்



ஊடகங்களும், ட்ரம்ப் பதவியேற்றத்திற்குப் பிந்தைய இந்த ஏழு மாதங்கள் நெடுகிலும் மூடிமறைக்கவே முனைந்துள்ளன. இராணுவ மற்றும் உளவுத் துறை முகமைகளின் பிரிவுகளுடன் ட்ரம்ப் மோதலுக்கு வருவதன் மீதான குற்றச்சாட்டுக்களுடன் சேர்ந்து ட்ரம்ப் மீதான அவர்களின் விமர்சனமானது, வெளியுறவுக் கொள்கை மீதான கருத்துவேறுபாடுகளையே மையத்



தில் கொண்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் சார்லட்வில்லில் நடந்த நவ-நாஜி வன்முறைக்குப் பின்னர், ஜனநாயகக் கட்சியினர் ட்ரம்ப் நிர்வாகத்தை முன்பினும் அதிகமாக இராணுவ மற்றும் நிதியியல் செல்வந்த தட்டுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் நேரடியாக வைப்பதற்கேற்ப அதை மறுசீரமைப்பதை ஆதரித்துள்ளனர்.

அனைத்திற்கும் மேலாக அரசியல் போராட்டக்காரர்களுக்கு எதிரான ட்ரம்பின் நடவடிக்கைகள், போலியான செய்திகளை எதிர்க்கிறோம் என்ற வேஷத்தின் கீழ் நீண்ட பாதிப்புகளைக் கொண்ட இணையத் தணிக்கை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, ஜனநாயகக் கட்சி மற்றும் அதனுடன் இணைந்த ஊடகங்களால் ஆதரிக்கப்பட்டு, இணைய நிறுவனங்களது நடவடிக்கையின் அதே வரிசையில் உள்ளன.

**லிபியாவின் உள்நாட்டு போர் நிலைமைகளில் சிக்கிய பெரும் எண்ணிக்கையிலான அகதிகளின் கொடூரமான தலைவிதி**

ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்பெயினின் அரசு தலைவர்களும் மற்றும் ஆபிரிக்க நாடுகளான நைஜர் மற்றும் சாட் இன் அரசுத் தலைவர்களும், அவர்களுடன் ஐ.நா. ஆதரவு பெற்ற லிபிய பிரதம மந்திரி ஃபயெஜ் அல்-சராஜ் உம் பரிஸில் பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் ஏற்பாடு செய்திருந்த புலம்பெயர்ந்தவர்கள் மீதான ஓர் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டனர்.

அம்மாநாட்டின் நோக்கமே. அதன் மீது அரசியல்ரீதியில் குற்றகரமான தன்மையை ஏற்படுத்தியதுதான். நூறாயிரக் கணக்கான அகதிகளுக்கு தஞ்சம் கோரும் உரிமையை எவ்வாறு மறுப்பது மற்றும் ஆபிரிக்காவின் வடக்கிலிருந்து லிபியாவுக்கும் மத்தியதரைக் கடலை கடந்து ஐரோப்பாவிற்கும் அவர்கள் பயணிப்பதை எவ்வாறு தடுப்பது என்பதன் மீது அந்த உச்சிமாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு கொள்கை தலைவர் ஃபெடரிகா மொஹெரினி கலந்து கொண்ட அந்த மாநாட்டில்,அகதிகளைக் கைது செய்து அவர்கள் தப்பியோடி வந்த அதே நாடுகளுக்கு அவர்களை திருப்பி அனுப்பி, அவ்விதத்தில் அவர்களை ஆபிரிக்காவிலேயே வைப்பதற்கும் மற்றும் மேற்கொண்டு புலம்பெயர்வதை அதைரியப்படுத்தவும் ஆபிரிக்க நாடுகளின் ஆயுத படைகளைப் பயன்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

அனைத்திற்கும் மேலாக அம்மாநாடு, லிபியாவில் 2011 நேட்டோ போரின் பேரழிவுகரமான விளைவுகளைக் கையாள்வதற்கான ஒரு



முயற்சியாக இருந்ததுஇ அப்போர்தான் கர்னல் மௌம்மர் கடாபி ஆட்சியைக் கலைத்துஇ இன்று வரையில் சீறிக்கொண்டிருக்கும் ஒரு இரத்தந்தோய்ந்த உள்நாட்டு போரைக் கட்டவிழ்த்து விட்டது. அம்மாநாடு, லிபியாவுக்குள் எந்தெந்த ஆயுதமேந்திய கன்னைகளை ஆதரிப்பது என்பதில் ஐரோப்பிய சக்திகளிடையே தீவிரமடைந்து வரும் பதற்றங்களைக் குறைக்கவும் முயன்றது.

2011 க்கு பிந்தைய லிபியாவின் உள்நாட்டு போர் நிலைமைகளில் சிக்கிய பெரும் எண்ணிக்கையிலான அகதிகளின் கொடூரமான தலைவிதியை எடுத்துக்காட்டி மற்றும் அகதிகள் மீது பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் யாரைச் சார்ந்திருக்க பரிந்துரைத்து வருகின்றதோ அந்தச் சக்திகளை அம்பலப்படுத்தி ஐ.நா. அண்மையில் அதிர்ச்சியூட்டும் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

**புலம்பெயர்வோரை தடுத்து நிறுத்தி, தடுப்புக்காவலில் வைப் பதற்காக லிபியாவில் அமைக்கப்பட் டுள்ள தடுப்புக்காவல் முகாம்களின் நிலைமைகளை ஐ.நா. சித்திரித்திருந்தது**

ஐ.நா. அறிக்கை குறிப்பிடுகையில், கடத்தல்காரர்கள் மக்களை சட்டவிரோதமாக நாடுகடத்துபவர்கள் ஆயுதக் குழுக்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளது அங்கத்தவர்கள் என இவர்களின் அதீத வன்முறை,சித்திரவதை மற்றும் பிற கொடூர-நடவடிக்கைகள் பலவந்த உழைப்பு; சுதந்திரத்தின் எதேச்சதிகார பறிப்பு; வன்புணர்வு ஏனைய பாலியியல் வன்முறை மற்றும் சுரண்டலுக்கும் புலம்பெயர்பவர்கள் தொடர்ந்து உள்ளாகிறார்கள். லிபியாவில் அடிமைச் சந்தைகள் இருப்பது குறித்து புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏப்ரல் 11. 2017 இல் கண்டித்தது. அங்கே துணை-சஹாரா புலம்பெயர்ந்தோர் அழைத்து வரப்பட்டு விற்கப்படுகிறார்கள் பெண்கள் பாலியல் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டது.

லிபியாவில் ஐ.நா. ஆதரவு திட்டத்திலிருந்து கிடைத்த அறிக்கைகளின் அடிப்படையில் புலம்பெயர்வோரை தடுத்து நிறுத்தி தடுப்புக்காவலில் வைப்பதற்காக லிபியாவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புக்காவல் முகாம்களின் நிலைமைகளை ஐ.நா., சித்திரித்திருந்தது. பொதுவாக சட்டமின்மை மற்றும் நீதித்துறை அமைப்புகளது பலவீனத்தின் காரணமாக, கடாபிக்குப் பின்னர் லிபியாவை ஆட்சி செய்யும் பல்வேறு போராளிகள் குழுக்களின் காட்டுமிராண்டித்தனமான நடத்தையால் பாதிக்கப்பட்டவர்களின் ‘‘குறைகள் மிகக் குறைவாகவே தீர்க்கப்படுவதாக’’ ஐ.நா. கண்டறிந்தது.



(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



101



அத்தியாயம் - VI

## கலைஞர் கருணாநிதியுடன் முக்கிய சந்திப்பு

இந்தியாவிலே பொதுத் தேர்தல் 1989 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டது. ராஜீவ் காந்தி பதவி விலகினார். வி.பீ.சிங் புதிய பிரதமரானார். வி.பீ.சிங் நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலே ராஜீவ் காந்தி சிறிலங்காவில் தலையிட்டமை ஒரு பெரும் ராஜதந்திர தவறுதலாகக் கொள்ளப்பட்டது. ராஜீவ் காந்தி புரிந்த தவறு நீடித்துச் செல்லக்கூடாது என்பதில் சிங் உறுதியாக இருந்தார். சிறிலங்காவுடனும் ஏனைய அண்டை நாடுகளுடனும் நல்லுறவை நிறுவ விரும்பினார். இந்திய அமைதிப் படையைத் திருப்பி அழைக்கும் முயற்சி வேண்டுமென்றே தாமதப்படுத்துவதாகக் கருதிய சிங், 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்தியப் படைகள் மீளப் பெறப்படும் என்று கட்டளை பிறப்பித்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண நிர்வாகமும் விரைவிலேயே செயலிழந்து செத்துவிடப் போகின்றது என்பதையே சிங்கின் நடவடிக்கைகள் உணர்த்தின. இதனால் பதற்றமடைந்த பெருமாள், புதுடில்லிக்கும் சென்னைக்கும் ஓடிப் போய், சிறிலங்காவில் இருந்து இந்திய அமைதிப் படையைத் திருப்பிப் பெற வேண்டாம் என்று, இந்தியத் தலைவர்களிடம் கெஞ்சினார். புதிய பிரதமர் சிங், தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தார். அத்துடன், சிறிலங்காவுடன் நட்புறவு பூணவும் விரும்பினார். எனவே, பெருமாளின் வேண்டுகோளை நிராகரித்தார். புதுடில்லியின் புதிய நிர்வாகத்திடமிருந்து அனுதாபம் பெற முடியாத பெருமாள், சென்னைக்கு விரைந்தோடித் தமது மாகாண நிர்வாகத்தைக் காப்பாற்ற உதவுமாறு முதலமைச்சர் மு.கருணாநிதியை வேண்டினார். ஈழத் தமிழர் மட்டில் இந்திய இராணுவம் நடந்துகொண்ட விதத்தை வெளிப்படையாகக் கண்டித்த கருணாநிதி, விடுதலைப் புலிகளுடன் பெருமாள் இணக்கத்துக்கு வந்து, வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று புத்திமதி கூறினார். கருணாநிதி ஒரு மத்தியஸ்தராக இருந்து இணக்கம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கருணாநிதியிடம் பெருமாள் கெஞ்சினார். இத்தகைய சூழலிலேயே தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியிடம் இருந்து நாம் இருந்த விடுதி அறைக்கு அவசர தொலைபேசி அழைப்பு வந்தது. நாம் சென்னையில் இருந்த காலத்தில் கருணாநிதியை பாலாவுக்கு நேரடியாகத் தெரியும். கூடுதலான அளவு விரைவாக, சென்னை வருமாறு கருணாநிதி பாலாவைக் கேட்டார். என்ன விடயம் என்பதை அவர் வெளியிடவில்லை. ஆனால், விசயம் மிக அவசரமானதும் முக்கியமானதுமாகும் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார். தமிழ்நாட்டு, பலம்மிக்க முதலமைச்சரின் வேண்டுகோளைப் புறக்கணிக்க பாலாவால் முடியவில்லை. ஆகவே, இணங்கினார். பிரபாகரனிடமிருந்தும் பிரேமதாசாவிடமிருந்தும் அனுமதி பெற்று, இரண்டு நாள்களில், பாலாவும் நானும் யோகியும் விமானம் மூலம் சென்னை சென்றோம்.

சென்னையிலே பலத்த பாதுகாப்புடன் ஒழுங்குசெய்யப்பட்ட துறைமுக விருந்தினர் இல்லத்தில் நாம் தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதலமைச்சரும் அவரது மருமகன் முரசொலி மாறனும் நாம் அங்கு தரித்திருந்த போது மூன்று தடவைகள் எம்மைத் தரிசித்தார்கள். வடக்கு - கிழக்கு மாகாண சபை மீளக் கூட்டப்பட்டால், ஈ.பி.ஆர்.எல்.எவ். உடன் அதிகாரத்தைப் பங்கிடப் புலிகள் சம்மதிப்பார்களா என்று கருணாநிதி விசாரித்தார். சபையில் சரிபாதி இருக்கைகளைப் புலிகளோடு பங்கிட ஈ.பி.ஆர்.எல்.எவ். தயார் என்று அவர் தெரிவித்தார். இது வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தில் புலிகள் சரிபாதி பங்குபற்ற வழிகோலும் என்றும் அவர் விளக்கினார். புலிகள் புதிய தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தயாராக இருக்கின்றனர் என முதலமைச்சருக்கு விளக்கிய பாலா, தமிழீழ மக்களே தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஆயுதம் தரித்த உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்த குரூரக் குற்றங்கள் பற்றிய விரிவான விளக்கத்தைக் கருணாநிதி முன்னிலையில் பாலா விவரித்தார். பெருமாளின் நிர்வாகம் புரிந்த தவறான செயல்களுக்காக ஈழத் தமிழ் மக்கள் அதை வெறுத்து, ஒதுக்குகின்றனர் என பாலா எடுத்துரைத்தார். முறைதவறிய தேர்தல் வழிகளால் அதிகாரத்துக்கு வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., இந்திய அமைதிப் படையின் கைப்பொம்மையாக இயங்கியது. இந்திய இராணுவமும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஆயுதக் குழுக்களும் புரிந்த தாங்கமுடியாத குரூரக் கொடுமைகள் காரணமாகப் புலிகளே அதிகாரத்துக்கு வரவேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்பினார்கள். தமிழர் தாயகத்தில் புதிய தேர்தல்கள் இடம்பெற்றால், விடுதலைப் புலிகள் பெருவெற்றி பெறுவது திண்ணம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் நம்பும் வண்ணம் பாலா எடுத்துரைத்தார். இறுதியில் புலிகளின் நிலைப்பாட்டைக் கருணாநிதி அங்கீகரித்தார். கூட்டு நிர்வாகத்தை வலியுறுத்துவதைத் தவிர்த்தார். இந்தச் சந்திப்புக்களின் போது வடக்கு - கிழக்கு நிலைவரம் பற்றி விரிவான மதிப்பீட்டையும் பாலா வழங்கினார். கருணாநிதி ஆழமாக மனக்கலவரமடைந்து காணப்பட்டார். யாரும் அறியாத வண்ணம் தலைமை அமைச்சருடன் நடந்த இந்தச் சந்திப்புகள் தவிர, பல விடுதலைப் புலி ஆதரவாளர்களையும். வை.கோ., வீரமணி போன்ற தமிழ் நாட்டுத் தலைவர்களையும் நாம் சந்தித்தோம். எமது 5 நாள்கள் பயண முடிவில் நாம் சென்னையிலிருந்து புறப்பட முன் செய்தியாளர் மாநாடு ஒன்றும் இடம்பெற்றது.



## புலிகளின் இரு கோரிக்கைகள்

தென்னிலங்கை ஜே.வி.பி. கிளர்ச்சிகளை 1990 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே பிரேமதாசா அரசு செவ்வையாக அடக்கியிருந்தது. சிறிலங்கா அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதால் வடக்கிலே போரும் முடிவுக்கு வந்திருந்தது. இந்திய இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தது. படைகள் திரும்பிச் செல்லும் முயற்சியும் மார்ச் மாத இறுதிக்குள் முடிவுறவேண்டும் என்பதால், வேகமாக நடந்து கொண்டிருந்தது. இந்தியப் படை விட்டு விலகும் வெற்றிடங்களில் விடுதலைப் புலிகள் நிலைபெற்றனர். இலங்கையில் அமைதியும் உறுதியும் நிலவியது.

கொழும்பு அமைதிப் பேச்சுகள் அரசுத் தலைவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தனிப்பட்ட பேச்சு அமர்வுகளாக அமைந்தன. ஹமீது எமது விடுதிக்குக் கிரமமாக வந்தார். அரசியல் தீர்வு தொடர்பான விடயங்கள் மீது கலந்துரையாடல்கள் தொடர்ந்தன. மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்ற விடுதலைப் புலிகள் சம்மதித்திருந்தமையால் பேச்சில் பெரிதும் அலசப்பட்ட விடயங்கள் அரசியல் யாப்பு மீதான 6 ஆவது திருத்தச் சட்டம் பற்றியதாகவும், பெருமாளின் மாகாண நிர்வாகத்தைக் கலைப்பது தொடர்பாகவும் இருந்தன. இந்த இரண்டு கடினமான விடயங்களும் விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா ஆட்சிக்கும் இடையே கடும் பிரச்சினையைத் தோற்றுவிப்பனவாக அமைந்தன.


சிறிலங்காவின் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 6 ஆவது சட்டத் திருத்தம், சிறிலங்கா அரசின் ஒற்றையாட்சித் தன்மையை வலியுறுத்துவதாகவும், பிரிவினை உரிமையைத் தடுப்பதாகவும் அமையும் மோசமான சட்டவாக்கமாகும். அது 1983 ஆம் ஆண்டு இனக் கலவரங்களை அடுத்து, சிங்கள, பௌத்த தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக ஜயவர்த்தனாவால் பிரகடனம் செய்யப்பட்டது. இந்தக் கொடிய சட்டத்தின்படி சுதந்திரத் தமிழரசுக்கான பிரிவினை அரசியலை விதந்துரைக்கும் அல்லது ஆதரிக்கும் எவரும் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படலாம். அவருடைய குடியுரிமை பறிக்கப்படலாம். சொத்துடைமையும் பறிமுதல் செய்யப்படலாம். நாடாளுமன்றம், மாகாண சபை, நகரசபை போன்ற அரசநிறுவனம் எதற்கும் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து உறுப்பினர்களும் ஒற்றையாட்சி அரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டும். ஆனால், ஒற்றையாட்சி அரசுக்கு, தாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் விசுவாசப் பிரமாணம் செய்ய முடியாது என்று பிரேமதாசாவிடமும் ஹமீதிடமும் விடுதலைப் புலி அணியினர் தெரிவித்தார்கள்.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



"யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா ஈழத் தமிழ் சினிமாவின் எழுச்சிக்கு உதவ வேண்டும்" என்ற தலைப்பிலான நீண்ட ஒரு செய்தியை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



# யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா: ஈழத் தமிழ் சினிமாவின் எழுச்சிக்கு உதவ வேண்டும்



(நேற்றைய தொடர்ச்சி)

நல்லிணக்கச் செயற்பாடு என்பது இரண்டு சம நிலையில் உள்ள தரப்பினர் சமதளத்தில் நின்று கைகொடுத்துக் கொள்வது என்று வரையறுக்க முடியும். ஒருவர் மேல் நிலையிலும் இன்னொருவர் கீழ் நிலையிலும் இருந்து கொண்டு சம வாய்ப்புப் பற்றியும் நல்லிணக்கம் பற்றியும் பேசமுடியாது.

இந்த சமனற்ற சூழலில் யுத்தத்தினால் பாதிக்கப்படாத இயல்பு நிலையில் உள்ள தென்பகுதிச் சமூகம் தனது மேல்நிலையான நன்குதேர்ச்சி பெற்ற தனது கொள்திறனாலும், இயலாற்றலாலும் (Capacity & Skill) இலகுவாக ஆங்காங்கே கிடைக்கின்ற வளங்களை தமதாக்கிக் கொள்கின்றார்கள். தமது செயற்றிட்டங்களை பாதிக்கப்பட்டவர்கள் சார்பானதான தோற்றத்தை உருவாக்குவதற்காக முகவர்களை கூலிக்கமர்த்தி தமது செயல்திட்டம் வெற்றி பெற்றதாகக் காட்டுகிறார்கள் அல்லது காட்ட முயற்சிக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே தொடர்ந்து நீடிக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையை 28 அமைப்புக்களை அங்கத்துவ நிறுவனமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் எப்போதும் கண்டித்து வந்திருக்கிறது.தொடர்ந்து தனது எதிர்ப்பை பதிவு செய்தும் வந்திருக்கிறது.

இதனால், பாதிக்கப்பட்டவரின் பெயரால் யுத்தத்தால் பாதிக்கப்படாத சமூகம் நன்மையடைவதான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நாம் எப்போதும் விமர்சனத்துக்குட்படுத்த வேண்டியதும். சந்தேகத்தோடு நோக்குவதும் எதிர்ப்பைப் பதிவு செய்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இவ்வாறான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற நிதிக் கொடை நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. சபை அமைப்புக்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறான செயற்றிட்டங்களை ஊக்குவிப்பதைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட சமூகம் நன்மையடைவதான செயற்றிட்டங்களை ஊக்குவிக்கவேண்டும் என்றுகேட்டுக்கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சமூகம் தான் சார்ந்த ஒருசெயல் திட்டத்தில் தான் உண்மையான பங்காளியாக இருக்கவேண்டும்; என்றும் எதிர்பார்ப்பதும்,தான் அந்தச் செயற்றிட்டத்தைச் சொந்தம் கொண்டாட நினைப்பதும் தவறான எண்ணமென்று கருதமுடியாது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

இந்தப் பின்னணியிலேயே பல நிதிக்கொடை நிறுவனங்கள், ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் உயர்ஸ்தானிகராலயங்கள், சர்வதேசநிறுவனங்களின் ஆதரவுடன் நடைபெறுகின்ற யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவையும் நோக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாண சர்வதேசதிரைப்பட விழாவை யாழ்ப்பாணத்தின் அமைப்புக்களும் தனிநபர்களும் திட்டமிட்டு உரிமை கொண்டாடி நடத்துவதே பொருத்தமானதாகும். கொழும்பிலிருந்து திட்டமிடுவதை வெறுமனே நடைமுறைப்படுத்தும் கூலிகளாக அல்லாமல் பிராந்தியத்தில் தாமே திட்டமிட்டுநடத்தும் ஒன்றாக இது மாற்றம் பெறவேண்டும். அதன் மூலம் தான் இலங்கைத் தமிழ் சினிமாவின் வளர்ச்சியைச் சாதிக்க முடியும்.

எண்பது ஆண்டுகளுக்கு மேலான தமிழ் நாட்டின் நீண்ட சினிமா வரலாற்றோடு எமது சினிமாப் பாரம் பரியத்தையும் சமகாலத்தில் இனங்காண முடியும். குறிப்பாக, நுகர்வு அடிப்படையில் அது ஆரம்பமாகி பின்னர் சுயமாக திரைப்படங்களைத் தயாரிப்பதாக பரிணாமம் பெற்றிருக்கிறது. அறுபது மற்றும் எழுபதுகளில் ஈழத்து தமிழ் சினிமாவில் தனித்துவமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பல திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

ஆனால், யுத்தத்தினால் இந்தத் தொடர்ச்சி தடைப் பட்டு ''இலங்கைச் சினிமா'' என்பது தனியனே ''சிங்களச் சினிமா'' என்ற அடையாளப்படுத்தலுக் குட்பட்டது. இந்த அடையாளத்தின் நீட்சியாக ஈழத்தமிழ் சினிமாவின் வளர்ச்சிக்கான வீரியமான வித்துக்கள் உருவாக்கத்திற்குத் தடையாக சினிமா சார்ந்த முயற்சிகளை கொழும்பை மையப்படுத்தயதாக திட்டமிடுவது எமக்கு பயன் தராத ஒன்றாகவே கருத வேண்டியுள்ளது.

அதேவேளை, யுத்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட சினிமா சார்ந்த செயற்பாடுகள் குறிப்பாக எமக்கான படங்களை நாங்களே தயாரித்தல் என்ற எண்ணத்தில் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்கள்குறும்திரைப்படமுயற்சிகள் அடியோடு தடைப்பட்டுள்ளன என்பதையும் மனங்கொள்ளவேண்டும்.

எழுபதுகளின் முயற்சிகள் மற்றும் யுத்தகால முயற்சிகளின் தொடர்ச்சியாக அவற்றிலிருந்து மேலும் வளர்ந்து செல்வதற்கான வாய்ப்பாகவே பெருமளவில் வளத் திரட்டலோடு நடைபெறும் யாழ்ப்பாண சர்வதேசதிரைப்பட விழா அமையவேண்டும் என்று நாம் கருதுகின்றோம். மாறாக முற்று முழுதாக கொழும்பு சார்ந்த திட்டமிடலும் அவர்களே வளங்களை திரட்டிக் கொள்வதுமான செயல்முறை நடக்கின்றபோது இது சாத்தியமாகாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கைச் சினிமா என்பது சிங்களச் சினிமா என்ற அடையாளத்தை வலுப்படுத்துவதாகவே யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா அமைந்திருக்கிறதோ? என்ற நியாயமான சந்தேகம் எமக்குள்ளது. இதனால், யாழ்ப்பாண திரைப்படவிழா ஈழத் தமிழ்ச் சினிமாவிற்கு ஊட்டம் சேர்ப்பதாகவும் திட்டமிடப்பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். இதற்கேற்ப உள்ளூர் தன்மையோடு இது அமைதல் வேண்டும்.

தற்போது குறுகியவட்டத்திற்குள் காணப்படும் இந்த திரைப்பட விழா பெரியவட்டமாக மாற்றம் பெறவேண்டும். அவ்வாறானதொரு நிலைமை காணப்பட்டால் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் காலத்தில் திரைப்பட விழா நடத்துவதான ஒவ்வாத நிலைமைகள் ஏற்படும் வாய்ப்பு இல்லாது போகுமென்று நம்புகின்றோம்.

இந்த விழாவுக்கு ஆதரவு நல்குகின்ற நிதிக் கொடையாளர்களும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளி நாட்டு உயர் ஸ்தானிகராலயங்கள் போன்றன யாழ்ப்பாணத் திரைப்படவிழா வட பகுதிமக்களின் திரைப்பட விழாவாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். உள்ளூர் அமைப்புக்களின் உண்மையான பங்குபற்றுதலுடனும் அவர்களின் சொந்தம் கொண்டாடுதலுடனும்; நடைபெறுவதற்குரியதான ஏதுநிலையை உருவாக்க நாமெல்லோரும் பாடுபடுவோம். இதற்காக வெளிப்படைத் தன்மையுடனும் வகை கூறல் தன்மையுடன் கூடிய செயல்திட்டங்கள் வகுத்தமைக்கப்படவேண்டும்.

தற்போதுள்ளது போன்று தனிநபர்களோ தனி அமைப்புக்களோ பயன் பெறும் வகையில்லாமல். தற்போது நடைபெறுவது போன்று மக்களுடன் தொடர்பற்றதாக இந்த விழா நடைபெறாமல் ஈழத்து தமிழ்ச் சினிமாவின் மீள்எழுச்சிக்குஏற்றதான இயலாற்றலையும் கொள் திறனையும் வளர்த்தெடுப்பதற்குரியதாக இதனை மக்களின் விழாவாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

**தேவநாயகம் தேவானந்த்**
*(தலைவர்)*
*யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்*



# வடக்கு, கிழக்கு இணைக்கப்படக் கூடாது மு.காவை ஆதரிக்கிறார் ஹிஸ்புல்லாஹ்!

கொழும்பு, செப். 20

வடக்கு, கிழக்கு இணைக்கப்படக்கூடாது என்ற விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவான நிலைப்பாட்டை எடுத்தால் அதற்கு எனது பூரண ஆதரவு வழங்கவுள்ளேன் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களமக்கள்ஒற்றுமையாகச்செயற்படக்கூடிய வகையில் கிழக்கு மாகாணம் தனித்து சுயாதீனமாக இயங்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தனது முகநூலில் பகிரங்கமாக வெளியிட்டுள்ள வீடியோவிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து முஸ்லிம் தலைமைத்துவங்களையும் இணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். எதிரணியில் இருப்பவர்களை விமர்சித்து எதிர்ப்பதன் மூலம் சமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையுடன் ஒன்றாக வாழ வேண்டும் என்பதே மறைந்த தலைவர் அஷ்ரப்பின் எதிர்பார்ப்பாகும்.

அதன் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள வடக்கும் கிழக்கும்மீளஇணைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போது தமிழ் சகோதரர்கள் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர்.

கிழக்கு மாகாணம் பிரிந்திருக்கும் போது எமக்கான சகல அதிகாரங்களும் கிடைக்கும்.

இதனால் மூன்று இனமும் ஒற்றுமையாக செயற்படக் கூடிய வகையில் கிழக்கு மாகாணம் தனித்து சுயாதீனமாக இயங்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளோம்.

வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைவதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.

கிழக்கு மாகாணம் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஒவ்வொரு குடிமகனுக்கும் சொந்தம்.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தெளிவான நிலைப்பாடு இல்லாமல் இருப்பதையிட்டு மிகவும் கவலையடைகின்றோம்.

வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதுவரை தெளிவான முடிவினையோ - நிலைப்பாட்டினையோ அறிவிக்கவில்லை.

எனினும், தமிழ்தலைமைகள் வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் அனுமதி வழங்கியுள்ளதாக கூறுகின்றனர்.

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஒப்புதல் வழங்கியமையாலேயே முஸ்லிம் காங்கிரஸிற்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் இது தொடர்பில் விளக்கமளிக்கவில்லை.



முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் அவ்வாறான கருத்துக்களை புறக்கணித்து வடக்கு கிழக்கு இணைய இடமளிக்க மாட்டோம் என தெளிவான கருத்தை முன்வைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிறீதரன் எம்.பியைச் சந்தித்தனர் சுவிஸ் நாட்டு உயரதிகாரிகள்!



நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் சுவிஸ் நாட்டு உயர் அதிகாரிகள் குழு ஒன்றுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன் போது சமகால அரசியல் நிலமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றமை தொடர்பிலும், அவர்கள் மீது இலங்கை அரசாங்கமும், அரச படைகளும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்ற சம்பவங்கள் தொடர்பிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம், மற்றும் காணி சுவீகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

## ஒரு சமூகம் வாழ்வதற்கு அவர்களது உடல் உள ஆரோக்கியம் அவசியம்!

### சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 20

ஒரு சமூகம் வாழ்வதற்கு அவர்களது உடல் உள ஆரோக்கியம் மிக முக்கியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவின் கீழ் உள்ள இத்தாவில் பகுதியில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றியிருந்தார்.

இதன் போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

முகமாலை வேம்பொடு கேணி, இத்தாவில் என்பவை பல்வேறு அடையாளங்களைக் கொண்ட பிரதேசமாகும்.

யுத்தத்திற்குப் பின்னர் எமது மக்களின் சுகாதாரத் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் வட மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி சுகந்தன் ஆகியோரது முயற்சியின் பயனாக இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு மனித சமூகம் வாழ்வதற்கு உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் மிகமிக முக்கியமானவை.

மனதிலே தெளிவு இருக்கும் போது தான் அவர்கள் வாழ்க்கையில் தெளிவைக் கொண்டிருக்க முடியும்.

மனத்தெளிவே உடலின் ஆரோக்கியம் ஆகும். ஆரோக்கியம் குன்றிப்போகும் போது, தன்னுடைய வாழ்வைத்தீர்மானிக்க முடியாது போகும். இதன் விரக்தி தான், பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன.

ஆதனால்தான், எல்லோரும் உடல் ஆரோக்கியத்தைப் பேணுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், பொதுமக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## 2009ஆம் ஆண்டில்..

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி வாய்ந்த மேற்குலக நாடொன்று சிறிலங்கா அனைத்துலக விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த போது, இதனைஜயதிலக உடனடியாக ஏற்றுக்கொண்டதுடன் நிபந்தனை ஒன்றையும் விதித்தார். அதாவது உலகில் யுத்தம் இடம்பெறும் பல்வேறு நாடுகளிலும் இதையொத்த விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என நிபந்தனை இட்டார்.

1972 இல் லண்டன் டெறியில் இடம்பெற்ற Bloody Sunday படுகொலை மற்றும் இந்தோ-சீனா மற்றும் அல்ஜீரியாவில் பிரான்சால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் போன்றன தொடர்பாகவும் அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜயதிலக கோரிக்கை விடுத்தார்.

ஜயதிலக தனது அணுகுமுறையில் வெற்றி பெற்றார் எனவும் இவரது அணுகுமுறை உணர்ச்சி மிக்கதாகவோ அல்லது அரசியல் நோக்கம் மிக்கதாகவோ இருக்கவில்லை எனவும் ஆனால் இது 'புலமைசார்ந்ததாக' இருந்ததாக திருமதி ஜயதிலக எழுதிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமத்துவம், வெளிப்படைத்தன்மை, ஜனநாயகம் மற்றும் நடைமுறைவாதம் போன்ற உலகளாவியகோட்பாடுகளுக்கு ஜயதிலக ஆதரவைத் தேடிக் கொண்டார். பொதுமக்களின் உயிர் தொடர்பாகக் கருத்திற் கொள்ளாத பயங்கரவாத அமைப்பொன்றுடன் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக நாடொன்றை சமமாகக் கருத முடியாது என ஜயதிலக வாதிட்டார். உலகெங்கும் இடம்பெற்ற மற்றும் இடம்பெறும் பல்வேறு யுத்தங்கள் தொடர்பாக ஜயதிலக பெற்றுக்கொண்ட அறிவானது சிறிலங்கா தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகளை விவாதிப்பதற்கு இவருக்கு உதவியது.

நாடுகளின் இறையாண்மை மதிக்கப்பட வேண்டியதன் தேவை தொடர்பாகவும் ஆபத்திலிருக்கும் அதிகாரிகள் 'பாதுகாப்பதற்கான உரிமை' என்கின்ற கோட்பாட்டின்கீழ் வெளிநாட்டுத்தலையீடுகளின்மூலம் பாதுகாக்கப்படுவது தொடர்பாகவும் ஜயதிலக வாதிட்டார். அனைத்துலகச்சட்டங்கள் உன்னதமானவையும் புனிதமானவையும், ஆனால் நிறுவக ரீதியான கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கவில்லை (சாசனங்கள் தவிர) என மைக்கேல் சாவேஜ் தெரிவித்த கருத்தை ஜயதிலக குறிப்பிட்டிருந்தார். ஆகவே அனைத்துலக நெறிமுறைகளுக்கு ஆதரவாக இறையாண்மை நாடுகள் செயற்படும் போது ஏற்படும் வெற்றிடத்தை அனைத்துலகச் சட்டங்களால் நிரப்பீடு செய்ய முடியாது.

ஜயதிலகவின் தனது இராஜதந்திர சாணாக்கியமானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் ஆசியாவின் பலம்பொருந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தக்கவைத்துக் கொண்டது. தமிழ்நாட்டின் அரசியல் அழுத்தத்தையும் பொருட்படுத்தாது இந்தியா சிறிலங்காவிற்கு ஆதரவளித்தது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்றன காஷ்மீர் மற்றும் ஏனைய பிரச்சினைகளில் முரண்பாட்டைக்கொண்டிருந்த போதிலும் சிறிலங்கா மீதான தீர்மானத்தில் மட்டும் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தன. நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கோரி அணிசேரா நாடுகளின் ஆதரவை ஜயதிலக பெற்றுக்கொண்டார். உள்ளக நிலைத்தன்மையானது சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிப்பதற்கு மட்டுமன்றி, சமூக, அரசியல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்கும் முக்கியமானதாகும்.

2011இல் ஐ.நா பொதுச் சபையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆற்றிய உரையில் தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதும் உறுதிப்படுத்துவதும் அடிப்படை அவசியமாகும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதையேஜயதிலகவும் வலியுறுத்தியிருந்தார்.

'சட்ட ஆட்சியைக் கடைப்பிடிப்பதென்பது அனைத்துலக விவகாரங்களிலும் நாடுகளுக்கு இடையிலும் மிகவும் முக்கியமானதாகும். இராணுவப் படைகளைப் பயன்படுத்தி மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள மக்கள் தமது சொந்தத்தலைவிதியைத் தாமே தெரிவு செய்ய வேண்டிய மற்றும் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற உரிமையைக் கொண்டுள்ளனர்' என மன்மோகன் சிங் குறிப்பிட்டிருந்தார்.

வழிமூலம் - Daily mirror
ஆங்கிலத்தில் - பி.கே.பாலச்சந்திரன்
மொழியாக்கம் - நித்தியபாரதி

காலைக்கதிர் Kalaikkathir



# இரட்டை இலையை முடக்குமாறு ஜெயலலிதா கூறியிருந்தாரா?

## பன்னீரிடம் தினகரன் கேள்வி



திருச்சி,செப்.20

இரட்டை இலை சின்னத்தை முடக்குமாறு ஜெயலலிதா கூறினாரா என ஓ.பன்னீர் செல்வத்துக்கு டி.டி.வி. தினகரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

திருச்சி உழவர் சந்தை மைதானத்தில் நேற்று அ.தி.மு.க. (அம்மா) அணி சார்பில் நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக் கோரி பொதுக்கூட்டம் நடைபெற்றவுள்ள நிலையில். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் சுவாமி கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்த பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

மத்திய அரசை கண்டு பயப்படுபவர்கள் நாங்கள் அல்ல. பயப்பட வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை. நாங்கள் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் வளர்ப்பு. நாங்கள் எங்கள் லட்சியத்தை அடைய நிதானமாக, பொறுமையாகச் செயற்பட்டு வருகிறோம். ரங்கநாயகி தாயார் சன்நிதியில் இருந்து சொல்கிறேன். எங்களது லட்சியத்தில் வெற்றியடைந்தே தீருவோம்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா தன்னிடம் நிறைய விஷயங்களை தெரிவித்தாக ஓ.பன்னீசெல்வம் கூறி வருகிறார். அதில் 11 உண்மைகளை கூறியதாகவும், மீதி 80 உண்மைகள் இருப்பதாகவும் கூறி மிரட்டி வருகிறார்.

நான் அவரிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். ஜெயலலிதா உயிரோடு இருந்த போது, அவரிடம் இரட்டை இலையை முடக்குமாறு கூறினாரா? இதற்கு அவர் பதில் சொல்ல வேண்டும். என்று கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் நீட் தேர்வு, ஹைட்ரோ கார்பன் எதிர்ப்பு என மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து செல்வோம் இவ்வாறு அவர் கூறினார்.



# ஆற்றில் படகு கவிழ்ந்து பத்து பேர் பரிதாபச் சாவு

கவுகாத்தி.செப்.20

அசாம் மாநிலத்தில் படகுப் பந்தயத்தைப் பார்க்க சென்றவர்களின் படகுகள் ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் பத்து பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அசாம் மாநிலத்தில் உள்ள கோல்பாரா மாவட்டத்துக்குட்பட்ட சபோன் ஆற்றில் நேற்று முன்தினம் படகுப் பந்தயம் நடைபெற்றது. இந்த பந்தயத்தை பார்க்க சென்றவர்கள் 4 படகுகளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ஏஏஏஏஏ

அப்போது, வீசிய பலத்த காற்றால் நிலைதடுமாறிய படகுகள் ஆற்றில் கவிழ்ந்தன.

இந்த விபத்தில் சிறுவர், சிறுமியர் உட்பட்ப பத்துப்பேர் ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என்று

# ஒரிசாவில் பன்றிக் காய்ச்சல் பீதி சாவு எண்ணிக்கை இப்போது 52!




புவனேஸ்வர்.செப்.20

ஒரிசா மாநிலத்தின் பல மாவட்டங்களில் பரவிவரும் பன்றிக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது.

ஒரிசா மாநிலத்தில் உள்ள 30 மாவட்டங்களில் 22 மாவட்டங்களை எச்1என்1 எனப்படும் பன்றிக்காய்ச்சல் நோய்த்தொற்றுத் தாக்கியுள்ளது. இந்த நோயால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 392 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே, பன்றிக் காய்ச்சல் நோய்க்காக எஸ்.சி.பி.மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒருவரும், புவனேஷ்வரில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஒருவரும் உயிரிழந்ததையடுத்து இந்நோயின் தாக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஒரிசாவை தாக்கிய பன்றிக்காய்ச்சல் நோய்க்கு 13 பேர் பலியாகினர். ஆனால், இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்குள் 52 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அம்மாநில மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

# பத்மநாப கோயிலில் தரிசனம் செய்ய பாடகர் ஜேசுதாஸுக்கு அனுமதி

திருவனந்தபுரம், செப்.20

கேரளாவில் உள்ள பிரசித்தி பெற்ற பத்மநாப சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய பாடகர் கே.ஜே.ஜேசுதாஸ் அனுமதி கோரியிருந்த நிலையில், அவருக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

மலையாளம், தமிழ், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் பல ஆயிரம் பாடல்களை கே.ஜே.ஜேசுதாஸ் பாடியுள்ளார். பத்மஸ்ரீ உள்ளிட்ட நாட்டின் பல உயரிய விருதுகளைப் பெற்றுள்ள இவர் கடந்த 56 ஆண்டுகாலமாகப் பாடி வருகின்றார். இந்து கடவுள்களைப் பற்றியும் ஐயப்ப சுவாமியைப் பற்றியும் இவர் அதிகம் பாடியுள்ளார்.

பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள சபரிமலை ஐயப்ப சுவாமி கோயிலுக்கும், கர்நாடக மாநிலத்தில் உள்ள கொல்லூர் மூகாம்பிகை அம்மன் கோயிலுக்கும் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ள கே.ஜே. ஜேசுதாஸ் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். சமீபத்தில் கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் குருவாயூரில் உள்ள கிருஷ்ணர் ஆலயத்திற்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின.

இதேபோல், மலப்புரம் மாவட்டத்தில் உள்ள கடம்புழா தேவி அம்மன் ஆலயத்திற்குச் சென்ற போதும் அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து, கேரள மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற பத்மநாப சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய அனுமதி கேட்டு விண்ணப்பித்தி ருந்தார்.

இந்நிலையில், அவரது விண்ணப்பத்தை பரிசீலித்துள்ள கோயில் நிர்வாகச் செயற்குழு, ஜேசுதாஸுக்கு தரிசனம் செய்ய அனுமதி அளிக்க முடிவெடுத்துள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்திருந்த பத்மநாப சுவாமி கோயிலின் நிர்வாக அதிகாரி வி.ரதீசன், இந்து மதத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் யார் வேண்டுமானாலும் பத்மநாப சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய வரலாம். - என்றார்.

# கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டி விவசாயிகள் போராட்டம்



காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பது உட்படபல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டில்லியில் நேற்று முன்தினம் 65ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையொட்டி விவசாயிகள் தங்களது கழுத்தில் தூக்குக்கயிற்றை மாட்டி ஊர்வலம் சென்றனர். இதுபற்றி போராட்டக்குழு தலைவர் அய்யாக்கண்ணு கூறியவை வருமாறு:-

விவசாயிகளுக்கு மத்திய அரசு உதவமுடியாவிட்டால், அவர்களது கழுத்தில் தூக்கு கயிற்றை மாட்டிவிடட்டும் என் பதை உணர்த்தும் விதமாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

# சீன,ரஷ்ய கடற்படைகள் போர் ஒத்திகை: அமெரிக்கா, தென்கொரியா தீவிர பயிற்சி!

## கொரிய தீபகற்பத்தில் பதற்றம்; உலக மக்களிடையே அச்சம்



தென்கொரிய எல்லையில் சீறிப் பாய்ந்த அமெரிக்க விமானப்படையின் எப்-35 போர் விமானங்களையும், தென்கொரியாவின் எப்-15 கே போர் விமானங்களையும் படத்தில் காணலாம்.

உலக நாடுகளின் அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ச்சியாக அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைச்சோதனைகளை நடத்தி வருகின்றது.

இதனால், கொரிய தீபகற்பத்தில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. இதன் ஒரு பகுதியாக சீன, ரஷ்ய கடற்படைகள் நேற்றுமுன்தினம் போர் ஒத்திகையைத் தொடங்கின. இதேபோல அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து எல்லைப் பகுதியில் தீவிரப் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

“வடகொரியாமீது இராணுவ நடவடிக்கை எடுப்போம்”-என்று அமெரிக்கா எச்சரித்து வருகிறது. இதற்குப் பதிலடியாக அமெரிக்காவைச் சாம்பலாக்குவோம், அமெரிக்காவின் குவாம் தீவை ஏவுகணை வீசி அழிப்போம்” - என்று வடகொரியா மிரட்டல் விடுத்து வருகிறது. சீனாவும் , ரஷ்யாவும் ஆரம்பம் முதலே வடகொரியாவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன. “அமெரிக்கா மீது வடகொரியா போர் தொடுத்தால் நடுநிலை வகிப்போம். ஒருவேளை வடகொரியா மீது அமெரிக்கா முதலில் போர் தொடுத்தால் அதைத் தடுப்போம்” -என்றும் சீனா அண்மையில் அறிவித்தது.

இந்தப் பின்னணியில்தான் கொரிய தீபகற்ப பகுதியில் சீன, ரஷ்ய கடற்படை இணைந்து இந்தப் போர் ஒத்திகையை நடத்துகின்றன என போரியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஒத்திகை ஒரு வாரம் நடைபெறும் என்று ரஷ்ய கடற்படை அறிவித்துள்ளது.

இதனிடையே, அமெரிக்காவும், தென்கொரியாவும் இணைந்து தென்கொரியாவின் எல்லைப் பகுதிகளில் போர் ஒத்திகை நடத்தி வருகின்றன.

இதில் அமெரிக்க விமானப் படையின் அணுகுண்டுகளை வீசும் திறன் கொண்ட பி-1பி, எப்-35 போர் விமானங்கள் பங்கேற்றுள்ளன. கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் போர் பதற்றம் உலக மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. (ச)

# கரீபியன் கடலில் ‘மரியா’ புயல்!

கரீபியன் கடலில் மீண்டும் ஒரு புயல் உருவாகி உள்ளது. அதற்கு 'மரியா' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தப் புயல் கரீபியன் கடலில் உள்ள டொமினிகா என்ற தீவு நாட் டைக் கடுமையாகத் தாக்கி உள்ளது.

வடஅமெரிக்கா அருகே கரீபியன் கடல் உள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பு இங்கு இர்மா புயல் உருவாகி அமெரிக்காவின் புளோரிடாவை கடுமையாகத் தாக்கியது. முன்னதாக கியூபாவை துவம்சம் செய்தது.

இந்த நிலையில், கரீபியன் கடலில் மீண்டும் ஒரு புயல் உருவாகியுள்ளது.

டொமினிகாவில் மணிக்கு 260 கிலோ மீற்றர் வேகத்தில் கடுமையான காற்று வீசியது. பலத்த மழையும் பெய்தது. அதனால், அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, வீடுகளில் இருந்து பொது மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விமானநிலையம் மற்றும் துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன.

## உலக மக்களை கண்ணீரில் நனைத்த ரோஹிங்கியா குழந்தை



வன்முறைக்குப் பயந்து படகுமூலம் பங்களாதேஷ் சென்ற ரோஹிங்கியா தாய் ஒருவரின் கையில் இருந்து, தவறிக் கடலுக்குள் விழுந்து உயிரிழந்த 40 நாள் குழந்தையின் நெஞ்சை உருக்கும் புகைப்படத்தை இங்கே காணலாம். (ச)

# ரோஹிங்கியா வன்முறை: காரணமானோர் தண்டிக்கப்படுவர்!

## ஆங் சான் சூகி கண்டனம்

நய்பிடா, செப்.20

மியன்மார் ரக்கினே மாநிலத்தில் ரோஹிங்கியா முஸ்லிம்கள்மீது நிகழ்ந்த அத்துமீறல்களுக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்கள் .

-இவ்வாறு அந்த நாட்டு அரசின் தலைமை ஆலோசகரான ஆங் சான் சூகி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் இடம்பெற்ற ஜுன்டா எனப்படும் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பி,வீட்டுச் சிறையில் இருந்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் ஆங் சான் சூகி.

அவருடைய ஆலோசனையின் பேரில் செயற்படும் மியன்மார் அரசை ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான வன்முறை தொடர்பில் தட்டிக் கேட்காதது ஏன் என உலகின் பல நாடுகளின் தலைவர்களும் ஆங் சான் சூகி மீது கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது இராணுவ ஆட்சிக்கு நிகரான அடக்குமுறைகள் தொடர்ந்த நிலையில், ஆட்சியின் தலைமை ஆலோசகர் என்ற முறையில் இதுவரை கருத்துக் கூறாமல் தவிர்த்து வந்த ஆங் சான் சூகி, தற்போது இந்த விவகாரம் தொடர்பாக முதன் முறையாக வாய் திறந்துள்ளார்.

மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சி (என்.எல்.டி.) இரண்டு சபைகளிலும் 80 வீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.



மியன்மார் அரசியல் சட்டப்படி வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்தவர் மற்றும் அவருடைய குழந்தைகள் நாட்டின் உயரிய பதவியை வகிக்க முடியாது.

இதன் அடிப்படையில் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சியின் தலைவரான ஆங் சான் சூகி, இங்கிலாந்து நாட்டுக்காரரைத் திருமணம் செய்தமையால் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே தனது ஆதரவாளரும், நம்பிக்கைக்குரியவருமான ஹிதின் கியாவ் என்பவரை சூகி களம் இறக்கினார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் அதிகமான எம்.பிக்களின் ஆதரவுடன் ஆங் சான் சூகியின் ஆதரவு பெற்ற ஹிதின் கியாவ் (வயது-67) மியன்மார்நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். ஆங் சான் சூகி அரச ஆலோசகராக இருந்து வருகிறார்.(ச)

# 'யாழின் கில்லாடி' இரண்டாம் சுற்று முடிவுகள்





(கங்கா)

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், 'யாழின் கில்லாடி' என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 32 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்கவுட் முறையில்



நடைபெற்று வருகின்றது. முதற்சுற்று ஆட்டங்கள் நிறைவுபெற்று தற்போது இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

### பாடும்மீன் அணிக்கு இலகுவான வெற்றி

இரண்டாம் சுற்று ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் அணியும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும் மோதின.

முதற்பாதியாட்டத்தில் பாடும்மீன் அணியின் மயூரன் முதலாவது கோலை தனது அணிக்காகப் போட்டார். இரண்டாவது பாதியாட்டத்தில் பாடும்மீன் அணியின் குயின்ஸ்ரன் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் போட்டார். இறுதி நேரத்தில் றேஞ்சர்ஸ் அணியின் ஆத்திகன் ஒரு கோல் போட்டார். முடிவில் பாடும்மீன் அணி 2:1 என்ற கோல்கள்



கணக்கில் வென்றது.

### குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி

மேலுமொரு ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோலையும் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணியின் கஜந்தன் ஒரு கோலைப் போட்டார். ஆட்டநேர முடிவு வரையில் அந்தக் கோல் நீடிக்க, குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி 1:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

### நவஜீவன்ஸ் அணியை பந்தாடிய றோயல்

மற்றுமொரு இரண்டாம் சுற்று ஆட்டத்தில், நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. போட்டி தொடங்கிய முதல் றோயல் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற, முதற்பாதியாட்டத்தில் இரண்டு கோல்களைப் போட்டது. இரண்டாவது பாதியாட்டத்திலும் சிறப்பாக விளையாடிய றோயல் அணி, மேலும் 2 கோல்களைப் போட்டது. றோயல் அணி சார்பாக கஜகோபன், எடிசன் ஆகியோர் தலா 2 கோல்களைப் போட்டனர்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி போராடி வெற்றி

மேலுமொரு ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் அணி மோதியது.



முதற்பாதியாட்டத்தில் வேலணை அணியின் சுதாகரன் சுபராஜ் முதலாவது கோலைப் போட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கு தடுப்பு உதை வாய்ப்பொன்று கிடைத்தது. அதனை பத்மா



நிதர்சன் கோலாக மாற்றினார். இரண்டாவது பாதியாட்டத்தில் எந்தவித கோல்களையும் இரு அணிகளும் அடிக்கவில்லை. 1:1 என ஆட்டம் சமநிலையில் இருந்தமையால், வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 5:4 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

# ஹாட்லியற்ஸ் அணி வெற்றி ; காலிறுதிக்குள்ளும் நுழைந்தது



(கங்கா)

பருத்தித்துறை ஹாட்லியற்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் கிறாஸ்கோப்பர்ஸ் அணியை வென்று, காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஹாட்லியற்ஸ் அணியை எதிர்த்து கிறாஸ்கோப்பர்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கோப்பர்ஸ் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கபிலன் 28, பிரகலாதன் 25, அஜித் 22, ரசிகரன் 21, தயுஸ்ரன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஹாட்லியற்ஸ் அணி சார்பாக பிரதீஸன் 3, றஜீவன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

164 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய ஹாட்லியற்ஸ் அணி, 14.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. சாகித்தியன் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், றஜீவன்



45 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இந்த வெற்றி மூலம் ஹாட்லியற்ஸ் அணி காலிறுதிக்குள் நுழைந்தது.

# சாமர சில்வா மீது போட்டித்தடை விதித்தது சரியே இலங்கை கிரிக்கெட் சபை ஆய்வுக்குழு தெரிவிப்பு

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் இடம்பெற்ற பாணந்துறை மற்றும் களுத்துறை விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் போட்டியொன்றில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றதாகக் கூறி அக்குற்றச்சாட்டிற்காக அப்போட்டியில் ஆடிய கழகங்களுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

களுத்துறை பௌதிக கலாசார அணி மற்றும் பாணந்துறை விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மூன்றுநாள்கள் கொண்ட முதல்தரப் போட்டியில் இரண்டு அணிகளதும் செயற்பாடுகள் மூலம் முதலாவது நாளில் 8 விக்கெட்டுகளுக்கு (ஒரு ஓவருக்கு 3.85 என்ற ஓட்டவீத சராசரியுடன்) 362 ஓட்டங்களே குவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று போட்டியின் இரண்டாம் நாளில் 4 விக்கெட்டுகளுடன் (ஒரு ஓவருக்கு 3.83 என்ற ஓட்டவீத சராசரியுடன்) 207 ஓட்டங்களே பெறப்பட்டிருந்தது. எனினும் மழை குறுக்கீடு காணப்பட்ட போட்டியின் இறுதிநாளில் வழமைக்கு மாறாக வெறும் 59 ஓவர்களுக்கு 24 விக்கெட்டுகளுடன் 603 ஓட்டங்கள் குவிக்கப்பட்ட விடயம் போட்டியில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் முதல்தரப் போட்டியொன்றில் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 165 ஓட்டங்களை 13.4 ஓவர்களில் மிகவும் வேகமாக பாணந்துறை அணி அடைந்தும் சந்தேகத்தை வலுவாக்கியது.

“போட்டி மத்தியஸ்தர்களாலும், நடுவர்களாலும் உருவாக்கப்பட்ட போட்டிக் குற்றச்சாட்டுகள் அடங்கிய அறிக்கைகளை (போட்டியின் மீது) துறைமுக அதிகாரசபை சந்தேகத்தை எழுப்பியதைத் தொடர்ந்து இரண்டு அணிகளதும் பயிற்றுவிப்பாளர்கள் உட்பட 27 பேருக்கு நாம் அனுப்பியிருந்தோம். எனினும் அனுப்பப்பட்ட இந்த முறைப்பாட்டில் இரண்டு அணிகளதும் நிர்வாக உத்தியோகத்தர்கள் பற்றி எதுவும் அடங்கியிருக்கவில்லை. எமது சுயாதீன குழுவின் மூலம் நாம்





இறுதியாக எடுத்த முடிவின்படி போட்டியில் பங்கேற்ற அனைத்து வீரர்களும் கிரிக்கெட் விளையாட்டின் புனிதத்தன்மையை களங்கப்படுத்தும் விதமாக செயற்பட்டிருந்தனர் என்பது நிரூபணம் ஆனது. ஆனால், பணத்தோடு சம்பந்தப்பட்ட ஆட்ட நிர்ணய சதிகளுக்கோ அல்லது வேறொரு குற்றத்திற்கோ எந்தவொரு ஆதாரமும் கிடைக்கவில்லை”. என இப்போட்டி – விசாரணைகள் பற்றி இலங்கை கிரிக்கெட் சபையின் உள்ளூர் கிரிக்கெட் தொடரின் தலைமை அதிகாரி பந்துல திசாநாயக்க தெரிவித்திருந்தார்.

இலங்கை அணிக்காக இறுதியாக 2011ஆம் ஆண்டு விளையாடிய நன்மதிப்பை கொண்ட அனுபவமிக்க வீரர்களில் ஒருவரும், பாணந்துறை விளையாட்டுக் கழகத்தின் இணை பயிற்றுவிப்பாளருமான சாமர சில்வா, களுத்துறை பௌதிக கலாசார அணியின் தலைவர் மனோஜ் தேசப்பிரிய உடன் இணைந்து (பாணந்துறை அணியினை தலைமை தாங்கியமைக்காக) இந்தப் போட்டியின் மூலம் எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளால் போட்டித்தடையைப் பெற்றுள்ளார்.

“எமக்கு வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், அவர் (சாமர சில்வா) தவறு இடம்பெற்றதாக கூறப்படும் போட்டியின் மூன்றாம் நாளில் அணித் தலைவருடைய அறிக்கையில் கையொப்பம் இடுவதற்காக மைதானத்தில் காணப்பட்டிருக்கவில்லை. அத்தோடு நேற்று சில அறிவுறுத்தல்களினால் நாம் அவர் சார்பாக எந்தவொரு குற்றத்தையும் பிடிக்கவில்லை. இருந்தபோதிலும், ஏற்கனவே கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக நாம் அவரிடம் எங்களது விசாரணைகளை மேற்கொள்ளும் போது ஏனைய வீரர்கள் போன்று சமமாகவே நடந்து கொண்டோம். அத்தோடு நாங்கள் போட்டியின் மூன்றாம் நாளின் விளையாட்டை மாத்திரம் இங்கு கவனத்தில் எடுத்திருக்கவில்லை. மூன்று நாள்கள் கொண்ட போட்டியொன்றுக்கு சாமர சில்வாவே தலைவர், நாங்கள் போட்டியைப் பற்றி முழுமையாக விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம். அத்தோடு போட்டித்தடையைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு வீரரும் பயிற்றுவிப்பாளரும் தமக்குரிய அத்தடையை இலங்கை கிரிக்கெட் சபையிடம் மீள்பரிசிலனை செய்து கொள்ள முடியும்”.

என இப்போட்டி தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் அசேல ரேகாவ கூறியிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் வாரியம் தற்போது குறித்த போட்டியின் முடிவை இரத்து செய்துள்ளதோடு இச்சம்பவத்தின் மூலம் ஏற்பட்ட திருப்தியற்ற தன்மைக்காக இரண்டு கழகங்களுக்கும் ஐந்து இலட்சம் ரூபா அபாரதமும் விதித்துள்ளது. மேலும் போட்டியின் முடிவு இரத்து செய்யப்பட்ட காரணத்தினால் இப்போட்டி மூலம் கிடைத்த புள்ளிகள் இரண்டை பாணந்துறை விளையாட்டுக் கழகம் இழந்துள்ளது. இதனால் தொடரின் புள்ளி அட்டவணையில் முதலிடத்தில் காணப்பட்ட பாணந்துறை அணி இரண்டாம் இடத்திற்கு போகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் தற்போது தொடரின் புள்ளிகள் அடிப்படையில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை விளையாட்டுக் கழகம் அடுத்த பருவகாலத்திற்கான உள்ளூர் கிரிக்கெட் தொடரில் பிரிவு அகழகமாக தரமுயர்த்தப்படும் சந்தர்ப்பத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சாமர சில்வா போட்டித் தடையைப் பெற்றிருப்பினும், அவருக்கு கிரிக்கெட் வீரர்களிடத்தில் ஆதரவு பெருகிவருகின்றது. இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான மஹேல ஜயவர்த்தன தனது டுவிட்டரில்,

ஆட்ட நிர்ணயத்தில் பங்கேற்காது போட்டியில் இருந்து விலகிச் சென்ற ஒருவருக்கு இரண்டு வருடங்கள் தடைவிதிப்பது எப்படி நியாயமாகும். சாமர நான் விளையாடிய போது காணப்பட்ட வீரர்களில் மிகவும் நேர்மையானவர். இவ்வாறான ஒரு சம்பவத்தில் கழகத்தின் உத்தியோகபூர்வ உறுப்பினர் எவராவது பங்கேற்று இருந்தால் அவருக்கு வாழ்நாள் தடைவிதித்து நாம் எல்லோருக்கும் உதாரணமாக அமைந்திருக்கலாம் என தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

# 2017 இல் 32 சிக்ஸர்கள் விளாசி ஹார்திக் பண்டையா அசத்தல்

இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரராகத் திகழும் ஹார்திக் பண்டையா 2017ஆம் ஆண்டில் இதுவரை 32 சிக்ஸர்கள் விளாசி ரசிகர்களுக்கு விருந்து படைத்துள்ளார்.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. 11 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மூன்று விக்கெட்டுக்களை இழந்து திணறியது. கேதர் ஜாதவ் 40 ஓட்டங்களும், ரோகித் சர்மா 28 ஓட்டங்களும் எடுக்க, 21.3 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

6ஆவது விக்கெட்டுக்கு டோனியுடன் ஹார்திக் பண்டையா ஜோடி சேர்ந்தார். இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். முதலில் நிதானமாக விளையாடிய ஹார்திக் பண்டையா அதன்பின் அதிரடியாக விளையாடினார். 66 பந்துகளை சந்தித்த ஹார்திக் பண்டையா 5 பவுண்டரி, 5 சிக்ஸர்களுடன் 83 ஓட்டங்களைக் குவித்தார். இவரும் டோனியும் இணைந்து 6ஆவது விக்கெட்டுக்கு 118 ஓட்டங்களைக் குவித்தனர்.

ஹார்திக் பண்டையா களம் இறங்கினாலே சிக்ஸரை எதிர்பார்க்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தில் மட்டும் 32 சிக்ஸர்கள் விளாசி இந்திய துடுப்பாட்ட வீரர்களில் முதல் வீரராக உள்ளார். சம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக 6 சிக்ஸர்கள் விளாசினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஐ.சி.சி. தர வரிசையில் கோஹ்லி முதலிடத்தில்

ரி-20 கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள சிறந்த ரி-20 துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி 826 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

ஆஸ்திரேலியாவின் அரோன் பிஞ்ச் இரண்டாமிடத்திலும், மேற்கிந்தியத் தீவின் அணியின் ஈவின் லீவீஸ் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் பட்டியலில் பாகிஸ்தான் அணியின் இமத் வாசிம் முதலிடத்திலும், இந்தியாவின் பும்ரா இரண்டாமிடத்திலும், தென்னாபிரிக்காவின் இம்ரான் தஹிர் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

சகலதுறை ஆட்டக்காரர் பட்டியலில் பங்களாதேஷின் ஷாகிப் அல் ஹசன் முதலிடத்தில் நீடிக்கின்றார்.

ஆஸ்திரேலியாவின் கிளின் மேக்ஸ்வெல் இரண்டாமிடத்திலும், ஆப்கானிஸ்தானின் நபி மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

சிறந்த ரி-20 அணிகள் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. பட்டியலில் பாகிஸ்தான் இரண்டாமிடத்தில் இருக்க, இந்தியாவுக்கு ஐந்தாவது இடம் கிடைத்துள்ளது. இலங்கை அணி எட்டாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமைகளை மாற்றியமைக்கும் விடயத்தில் கூட்டமைப்பு ஏற்கனவே கொள்கை அளவில் இணங்கியிருக்கின்றமையால் இன்று சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலத்தை ஆதரிக்கும் முடிவையே அது எடுக்கும் எனக் கருதப்படுகிறது. (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் எழுபத்தி யைந்துக்கும் அதிகமான தடவைகள் வழிகாட்டல் குழு கூடி, நீண்ட ஆராய்வுக்குப் பின்னர் இந்த இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பது தெரிந்ததே.

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் புதிய அரசமைப்பு முயற்சிக்கான முக்கிய மைல் கல்லாக இந்த நிகழ்வு நாளை நடைபெறவிருக்கின்றது.

## கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிக்கப்பட்டுள்ளது என்றும் –

இது நாளை (இன்று) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் –

அரசுக் கட்சிப் பிரமுகரான லக்ஷ்மன் கிரியெல்ல கூறிய போது மூன்று அமைச்சர்களும் கொதித்து எழுந்தனராம். இது எங்கே அமைச்சரவைக்கு வந்தது என்று அவர்கள் வினா எழுப்பினர்.

அப்போது லஷ்மன் கிரியெல்லவுக்கும் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் கடும் சொற்போர் நடந்ததாகவும் கூறப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் அறையில், அவரின் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற போதே அரசுத் தரப்பு அணிகளுக்கு இடையிலே இந்தக் குழப்பம் ஏற்பட்டது.

மாகாண சபைகள் உட்பட பல அமைப்புகளுக்குமான தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பில் மேற்படி அமைச்சர்களினதும் கட்சிகள் ஈ.பி.டி.பி.யுடன் சேர்ந்து ஒரு யோசனைத் திட்டத்தை கையளித்திருந்தன.

அவை கணக்கில் எடுக்கப்படாமல் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைக் காதும், காதும் வைத்தால் போல, ஒரு நாள் முன்னறிவித்தலில் நிறைவேற்றுவதா என்றே இந்த அமைச்சர்கள் சீறினர். கூட்டு எதிரணியும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

எனினும் அரசு அந்தத் தேர்தல் சட்டத்தை இன்று புதன்கிழமை சமர்ப்பித்து நிறைவேற்றுவதில் உறுதியாக இருப்பதாக அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் கைவிடப்பட்டமையால் இன்று அது விவாதிக்கப்பட இருந்த இடத்தில் மாகாண சபைகள் தேர்தல் சீர்திருத்தச் சட்டம் விவாதிக்கப்படவிருக்கின்றது.

நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் மேற்படி மூன்று அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உள்ள தமது அலுவலகத்துக்கு அழைத்துப் பேசிச் சமாளித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து தமிழ்க் கூட்டமைப்பின் கடும் ஆட்சேபனையையும் அதிருப்தியையும் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏம். ஏ.சுமந்திரன் வெளியிட்டிருக்கின்றார்.

இந்தச் சட்டமூலத்தின் செல்லுபடியாகும் காலம் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்தையும் அவர் ஆட்சேபித்திருக்கின்றார்.

இச்சட்டம் வரமுன்னர் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் இச்சட்டம் செல்லுபடியற்றது எனப் பிரதமர் கூறினார் என்று செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (உ)

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகளில் முப்பது வீதமான இடத்தைப் பெண்களுக்கு அளிப்பதை உறுதிப்படுத்துவதற்கான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் ஏற்கனவே நிலுவையில் உள்ளது.

அதனையே நாடாளுமன்றத்தில் இன்று எடுப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

இந்தச் சட்டமூலத்தை குழுநிலை விவாதத்தின் போது மாற்றியமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அதன்படி –

தொகுதிவாரித் தேர்தல், விகிதாசாரப் பிரதிநிதித்துவம், இரண்டும் கலந்த தேர்வு ஆகியவை அடங்கிய திருத்தங்கள் இந்தச் சட்டமூலத்துக்கு குழுநிலை விவாதத்தில் சேர்க்கப்படும்.

அதாவது –

மகளிருக்கு முப்பது வீத இடமளிப்பதற்காக கொண்டு வரப்படும் இந்தச் சட்டமூலம் இறுதியில் நிறைவேற்றப்படும் போது தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சட்டமூலத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றி அந்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் ஒப்பமிடுவாராயின் –

அதன் பின்னர் அதில் குறிப்பிட்டவாறான ஒரு தேர்தல் முறைமையின் கீழேயே சம்பந்தப்பட்ட தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்த வேண்டியிருக்கும்.

இப்போது இவ்வாறான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு அது சட்டமானால் அதன்படி –

தேர்தல் தொகுதிகளைப் பிரித்து தெரிவு, செய்யப்படும் அங்கத்தவர் எண்ணிக்கையைத் தீர்மானித்து, தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகளை வகுத்து, அதுபோன்ற பல்வேறு பணிகள் பூர்த்தியான பின்னர்தான் சம்பந்தப்பட்ட தேர்தலை நடத்த முடியும்.

இன்று நிறைவேறும் சட்டத்தில் அப்பணிகள் ஆறு மாதத்தில் முடிக்கப்படவேண்டும் எனக் காலக்கெடு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கான கெடுவில் அது முடியும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அப்பணி ஆறு மாதம் என்ன ஆறு வருடங்கள் கூட எடுக்கலாம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயத்தில் அப்பணி நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து. இன்னும் பூர்த்தியாகவில்லை.

இன்னும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் வரவேண்டியுள்ளது என்ற சுட்டிக்காட்டப்படுகின்றது.

எது, எப்படியோ மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தும் கண்டத்திலிருந்து இந்தச் சட்டமூலம் வாயிலாக அரசு தப்பிக்கப் போவது நிச்சயம் எனக் கொழும்பு அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்தனர். (உ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2013 முதல் 2016 வரை 696 பேர் கைது

கொழும்பு,செப்.20

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கடந்த 2013 முதல் 2016 வரையான காலப்பகுதியில் 696 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் இந்தக் காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் யாவை என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் வழங்கிய பதிலில், 2013 இல் 156 பேரும், 2014இல் 252 பேரும், 2015 இல் 128 பேரும், 2016 160 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

எனினும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போது, வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும் வழக்குகள் தொடரப்பட்டன என அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## உயர்நீதிமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என உயர்நீதிமன்றம் தெரிவித்திருப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இந்தத் திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதிபெறப்படவேண்டுமென என வலியுறுத்தப்பட்டமையால் இந்தச் சட்டத் திருத்தத்தை அப்படியே கைவிடுவதற்கு அரசு முடிவு செய்ததாகக் கூறப்பட்டது.

(07 ஆம் பக்கமும் பார்க்க)

## இங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். மாநகர சபைக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு பின்னர் பிரிட்டனில் புகலிடம் கோரி அங்கு வாழ்ந்து வந்தவரான எஸ். கணேந்திரன் என்பவர் பிரிட்டனிலிருந்து இதற்காக இங்கு விசேடமாக வந்து நின்று விடயங்களைக் கவனிக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக பட்டதாரியான அவரது மனைவி சாருலதாவும் இந்த முயற்சியில் தொடர்புபட்டிருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

இங்கு கூட்டமைப்புக்கு மாறான பல அரசியல்வாதிகளை இவர் சந்தித்து மாற்றுத் தலைமைக்கும் மாற்றுக் கட்டமைப்புக்கும் ஆள் திரட்டி வருகின்றார் என்றும் சொல்லப்பட்டது. இந்த மாற்றுக் கட்டமைப்புத் தொடர்பான ஆரம்பக் கட்டக் கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடக்க விருப்பதாகவும் –

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் இது தொடர்பான பூர்வாங்கக் கூட்டமும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன எனவும் தெரிகின்றது.

இதுவரை கூட்டமைப்புடன் செயற்பட்ட சிலர் இந்த அமைப்பில் இயங்குவதற்கு தயார் என கணேந்திரன் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறிவருகின்றார். பெரும் புத்திஜீவிகள் பட்டாளம் தமக்குப் பின்னால் இருப்பதாகவும் அவர் சொல்லுகின்றார்.

மட்டக்களப்பைச் சேர்ந்தவரான கணேந்திரன் 1998இல் யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் மாநகர சபைத் தேர்தல் நடத்தப்பட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டு யாழ். மாநகரசபை உறுப்பினராக சில ஆண்டுகள் பணியாற்றியவர். (உ)

## காணாம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

நாளை இது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறாது என அரசு தற்போது அறிவித்துள்ளது.

(7ஆம் பக்கமும் பார்க்க)

## சுமந்திரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பிக்கப்பட்டது.

பிரமுகர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்பு பிரிவுப் பொலிஸாரால் இந்த 5 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சுமந்திரனைக் கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டிய வழக்கு தொடர்பில் அறிக்கை எதுவும் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் கிளிநொச்சி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தில்லைநாதன் அர்ச்சுனா மன்றில் தெரிவித்தார்.

இதற்கு அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் ஆட்சேபனை தெரிவித்தார்.

விசாரணைகள் இன்னும் முடியவில்லை எனவும், பிணை வழங்கினால் சந்தேகநபர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருவரின் வாதங்களும் மன்றில் முன்வைக்கப்பட்ட பின், நீதிபதி உத்தரவு வழங்கி னார்.

இலங்கைச் சட்டத்திற்கு அமைய குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் வரையில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் சந்தேக நபர்களாகவே கருதப்பட வேண்டும். முன்னாள் போராளிகள் என்பதற்காக அவர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைப்பதனால் அவர்களின் நடமாடும் மற்றும் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் என நீதிபதி கூறினார். இதனைக் கருத்தில் கொண்டு சந்தேகநபர்கள் ஐவரையும் நிபந்தனை அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதியளித்து நீதிபதி இளஞ்செழியனின் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் சந்தேக நபர்கள் சாதாரண சட்டத்தின் கீழேயே நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்கு எம்.ஏ. சுமந்திரன் எம்.பியே கடும் ஆட்சேபனை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## டெனீஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பூர்வாங்க பரிசீலனைக்கு எடுத்து ஆராய்ந்தது.

இந்த மனுத் தொடர்பில் எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிப்பதா மற்றும் இடைக்காலத் தடை உத்தரவு வழங்குவதா என்பன குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதி அறிவிக்கும்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதன் தலைவர் நீதியரசர் தெஹிதெனிய, நீதியரசர் ஷிரான் குணவர்த்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று மதியம் சுமார் ஒன்றரை மணி நேரம் இந்த ரிட் மனு மீதான பூர்வாங்க பரிசீலனை நடைபெற்றது.

மனுதாரரான டெனீஸ்வரன் சார்பில் சட்டத்தரணி லிலந்தி டி சில்வாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும் –

முதலாம் எதிர்மனு தாரரான சி.வீ.விக்னேஸ்வரன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கனக ஈஸ்வரனும் –

ஆறாம் எதிர்மனு தாரரான முன்னாள் மாகாண அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் சார்பாக சட்டத்தரணி நிரான் அங்கிட்டலும் –

நேற்று நீதிமன்றில் ஆஜராகி வாதாடினர்.

எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிப்பது குறித்தும் இடைக் காலத் தடைவிதிப்பது குறித்தும் தனது முடிவை நீதிமன்றம் 3ஆம் திகதி அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தேர்தல் தொடர்பில் இன்னும் ஒரு வர்த்தமானி அறிவித்தல்வர வேண்டியிருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறின.

பெண்கள் பிரதிநிதித்துவம் அல்லது இரட்டை அங்கத்துவப் பிரதிநிதித்துவ வட்டாரங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றே தவறிப் போய் விட்டது என்றும் –

அதை எப்போது அரசு வெளியிடுகின்றதோ அதன் பின்னர்தான் அந்தத் தேர்தலுக் கானநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உள்ளூராட்சித்தேர்தலுக்கான சகல சட்ட ஏற்பாடுகளும் முடிவடைந்து விட்டன. 'பந்து இப்போது தேர்தல் ஆணையத்தின் களத்தில்!' என்று அரசுத்தரப்பில் கூறப்படுவது தவறு எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தேர்தலை நடத்துவதற்கு அரசு எப்போது தயாராகின்றதோ அப்போதுதான் அந்த வர்த்தமானி அறிவித்தல் வரும் போல தோன்றுகின்றது. இந்தத் தேர்தல் தொடர்பிலும் அரசு துரும்புச் சீட்டு ஒன்றைத் தனது கைகளில் வைத்துக் கொண்டுதான் விளையாடுகின்றது. இந்த கடைசி வர்த்தமானி அறிவிப்புதான் இந்தத் தேர்தலுக்கான சாவி. அதனை அரசு எப்போது வெளியிடுகின்றதோ அப்போது தான் பூட்டுத் திறக்கப்படும். உள்ளூராட்சி தேர்தல் சக்கரம் சுழலத் தொங்கும். அதுவரை நாம் காத்திருக்க வேண்டியது தான். – இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# வடக்கு – தெற்கு இனவாதிகளுக்கு இடையே உத்தியோகபூர்வமற்ற உடன்படிக்கைகள்!

## அம்பலப்படுத்துகிறார் அமைச்சர் மனோ

யாழ்ப்பாணம், செப். 20

நாட்டில் இனவாதத்திற்கு உரமூட்டுவதற்காக வடக்கிலுள்ள இனவாதிகளுக்கும், தெற்கிலுள்ள இனவாதிகளுக்கும் இடையே உத்தியோகபூர்வமற்ற உடன்படிக்கைகள் காணப்படுகின்றன என தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சகவாழ்வு பற்றித் தெரியாத இனவாதிகளே ஐ.நா. பொதுச் சபை அமர்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரை நிகழ்த்தவுள்ள நிலையில் அங்கு கூடி ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவிருக்கின்றனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர் எம் அடையாளம், பல இனங்கள் எம் சக்தி என்ற தொனிப்பொருளில் சகவாழ்வு மற்றும் நல்லிணக்க விழிப்புணர்வு நடவடிக்கை பதுளை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக பதுளை மாவட்டத்திற்கு நேற்றுமுன்தினம் அமைச்சர் மனோ கணேசன் விஜயம் செய்ததோடு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அச்சிடப்பட்ட ஸ்ரிக்கர்களையும் பஸ்கள் உட்பட பொது இடங்களிலும் ஒட்டிவைத்தார்.

இந்த விஜயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரும் கலந்துகொண்டார்.




நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் 72 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ள நிலையில், அவருக்கு எதிரான போராட்டம் ஒன்றை நடத்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பிலும் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்கிற்கு சென்று ஐ.நா. பொதுச் சபை அமர்வில் உரையாற்றவுள்ளார். அவர் உரையாற்றும்போது அங்குள்ள இனவாதக் குழுக்கள் அவருக்கெதிராக போராட்டங்களை செய்யவுள்ளன. பரவாயில்லை. பிரச்சினையில்லை. இன்று இந்நாட்டில் சகவாழ்வை முன்னிலைப்படுத்தி பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

அதனைப் புரிந்துகொள்ள முடியாதவர்களே இன்னும் இனவாதத்தை தலைதூக்கச் செய்து மேற்கொள்கின்றனர். சர்வதேசத்தில் மட்டுமல்ல, இனவாதம் எமது உள்நாட்டிலும் இருக்கின்றது. வடக்கிலும், தெற்கிலும் இருக்கின்றது.

வடக்கிலுள்ள இனவாதிகள் வாய்திறக்கும்போது தெற்கிலுள்ள இனவாதிகளுக்கு புள்ளி கிடைக்கின்றது. அதேபோல தெற்கிலுள்ள இனவாதிகள் வாய்திறந்தால் வடக்கிலுள்ள இனவாதிகளுக்கு புள்ளிகிடைக்கிறது. வடக்கு, தெற்கு இனவாதிகளிடையே உத்தியோகபூர்வமற்ற ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. இவர்கள் அனைவரும் உறவினர்களாவர்.

அதனால், இப்படியான உறவினர்கள் சிறிதளவே இருக்கின்றனர். இவர்களை ஓரங்கட்டி இலங்கையர்கள் என்ப தன்கீழ் பயணிப்போம். இவற்றை கணக்கில் எடுக்க வேண்டாம்.

தேர்தல்கள் காலத்தில் பார்த்துக் கொள்ளுங்கள். மற்றைய நேரங்களில் இலங்கையர்களாக நினைத்துக் கொள்ளுங்கள். இதனைப் புரிந்துகொண்டால் ஜெனீவா, ஐ.நா. பொதுச் சபை செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. அதேபோல அல் ஹுசைன், ட்ரம்ப், நரேந்திர மோடி ஆகியோருடன் பேசுவதற்கும் அவசியம் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கரையோரப் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்!

கொழும்பு, செப். 20

கரையோரப் பாதுகாப்பிற்கு பொதுமக்களின் பங்களிப்பு அவசியம் கரையோரப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

நாட்டின் 25 நிர்வாக மாவட்டங்களில், 17 நிர்வாக மாவட்டங்கள் கரையோரங்களுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளன. இதில் 75 சதவீதமானவற்றில் சுற்றுலாத் தொழில்துறைக்காக பயன்படுத்தப்படுகின்றன.

70 சதவீதம் கடற்றொழிலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான நிலையில் கரையோரம் அசுத்தமடைவதற்கு இடமளிக்க முடியாதென்றும் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.



நாட்டின் மத்திய பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் கரையோரங்கள் மாசடைவதற்கும், அழுத்தங்களாக அமைகின்றன.

நதிகள் ஒன்றுசேரும் இடங்கள் மூலமாக கடலுக்குள் கழிவுப் பொருள்கள் வருவதால் கரையோரங்கள் அசுத்தமடைகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றாடல் மற்றும் கடற்றொழில்துறையில் ஈடுபட்டுள்ளோர் கரையோரப் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் பணிப்பாளர் நாயகம் மேலும் வலியுறுத்தினார்.

# மக்களை ஏமாற்றுவது சுலபமான காரியமாகும்!

## ரில்வின் சில்வா கூறுகிறார்!

கொழும்பு, செப். 20

மக்களை ஏமாற்றுவது மிகவும் சுலபமான காரியமாகும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் அனைவருக்கும் மாற்றம் ஒன்று தேவைப்ப டுகின்றது. எவ்வாறு மாற்றமடைய வேண்டும் என்பது குறித்து மக்களுடன் பேசவேண்டியதே எமது முயற்சியாகும்.

மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் மக்களை ஏமாற்றிய போது இன்றும் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

தனது ஆலோசனைக்கு அமைய ஒரு குற்றம் இழைக்கப்பட்டால் அது நன்மையானது என்று வெளிக்காட்டுவதற்கு பௌத்த பிக்குகளை இணைத்துக் கொள்கின்றனர்.

ஆட்சியை கைப்பற்ற முன்னதாக மைத்திரி கூறினார் தாம் இந்த நாட்டின் இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்று. எனினும் இன்று அவர் என்ன கூறுகின்றார்?

நாட்டில் பிரச்சினை உண்டு என ஜனாதிபதியும் பிரதமரும் கூறுகின்றனர்.



மஹிந்த ராஜபக்ஷவே இந்தப் பிரச்சினையை உருவாக்கினார் என ரணில் கூறுகின்றார்.

இரண்டு ஆண்டுகளாகவே பிரச்சினை நிலவுகின்றது என மஹிந்த கூறுகின்றார்.

நாம் பார்க்கும் கோணத்தில் இவர்கள் இந்தப் பிரச்சினையை நோக்கவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது.

இரண்டு தரப்பினரும் மாறி மாறி நாட்டை ஆட்சி செய்து நாட்டை பிரச்சினைகளுக்குள் சிக்க வைத்துள்ளனர்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# உமாஓயாவை தேசிய அரசு கைவிடவில்லை: விவாதிக்கத் தயார் என்கிறார் அமரவீர!

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி வேலைத் திட்டத்தை கடந்த அரசு ஆரம்பித்திருந்தாலும், அதனை தேசிய அரசு கைவிடவில்லை என கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரும், மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

உமா ஓயா திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் எதனையும் பெற்றுத்தரவில்லை என சில அரச சார்பற்ற நிறுவனங்கள் விமர்சனங்களை முன்வைக்க விரும்பினால் அவர்களுடன், விவாதிக்க தான் தயார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உமாஓயா திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் பண்டாரவளை கரந்தகொல பிரதேசத்தில் உமாஓயா அபிவிருத்தி காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றிய போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய அரசு உமா ஓயா திட்டம் குறித்து பொறுப்புக் கூற வேண்டி கடமை இருப்பதால் அதற்காக விசேட அமைச்சரவை அங்கீகாரம் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.



இதற்கமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் தொகைகள், உபகரணங்களுடன், இப்பகுதி மக்களுக்கு முதல் முறையாக இலவசமாக தண்ணீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீதிகளை புனரமைப்பதற்காக இதுவரை 16 கோடியே 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, மகாவலி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# தேர்தலைப் பின்போட வேண்டிய தேவை ஏதும் ஐ.தே.கவுக்கோ, சு.கவுக்கோ இல்லையாம்!

## இப்படிக் கூறுகின்றார் பிரதமர் ரணில் விக்ரமசிங்க

கொழும்பு, செப்.20

தேர்தலை பிற்போட வேண்டிய எந்தத் தேவையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கோஅல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ இல்லை எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகை என்பன வருவதால் அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தேர்தலை ஜனவரியில் நடத்தலாம் என்பது கட்சித் தலைவர்களின் கருத்து எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புதியதேர்தல்முறைக்கு நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்ட அவர், கடந்த கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின்போது மாகாண சபைத் தேர்தல் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், நவம்பரில்வரவு–செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாலும் டிசெம்பரில் சாதாரண தரப் பரீட்சை மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகை ஆகியவரவுள்ளமையாலும், ஜனவரியில் தேர்தலை நடத்துவதே பொருத்தமானது என்பது கட்சித் தலைவர்களின் கருத்து எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத் தாங்கள் அறிவித்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (உ)

# 8 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!



யாழ்ப்பாணம், செப்.20

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் எட்டு இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து கடற்படையினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

அவர்களை நேற்று மாலை 4.30மணியளவில் யாழ்.நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

இதன் பின்னர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் இவர்களை முன்னிலைப்படுத்திய போது, எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என யாழ்.மாவட்ட நீரியல் வள உதவிப் பணிப்பாளர் து.சுதாகர் தெரிவித்தார்.

# பொலிஸ் காவலில் கைதி ஒருவர் சாவு!

பொலிஸ் காவலில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

காலி, பிடிகல பிரதேசத்தை அண்மித்த மாரகொட பிரதேசத்தில் இடம்பெற்ற குடும்பச் சண்டை தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை நேற்று காலை பிடிகல பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர் நேற்று பிற்பகல் உயிரிழந்த நிலையில் பொலிஸ் நிலையத் தடுப்புக் கூண்டுக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

எனினும் சம்பவத்தின் போது கடமையில் இருந்த பொலிஸார் அனைவரையும் தற்காலிக பணிநிறுத்தம் செய்யுமாறும், சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

# ரயில்வே மேற்பார்வையாளர்கள் இன்றிரவு முதல் வேலை நிறுத்தம்?



சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருடன் இடம்பெற்ற பேச்சுகள் தோல்வியடைந்தமை காரணமாக இன்று நள்ளிரவு முதல் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்பு திட்டமிட்டப்படி நடக்கும் என ரயில்வே மேற்பார்வை உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வேதன முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளின் உரிய பதில் கிடைக்காததால் இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளனர் என அந்தக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இன்று நள்ளிரவு முதல் இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஆரம்பமாகவுள்ளதாக அந்த கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

### மூடிய அறைக்குள்

# மைத்திரி – ஐ.நா. ஆணையர் மிகவும் முக்கியமான சந்திப்பு

### நாளை மறுதினம் நியூயோர்க்கில்

நியூயோர்க், செப்.20

இலங்கைக்கு மிக முக்கியமான – அதிக நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய – சந்திப்பு ஒன்றை நியூயோர்க் சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மறுதினம் மேற்கொள்கின்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனுடனான சந்திப்பே அது.

மூடிய அறைக்குள் அவர்கள் இருவர் மட்டுமே இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வர் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் மீள் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் இலங்கையின் மந்தப் போக்குக் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தமது ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பகிரங்கமாக அறிவித்துள்ள பின்னணியில், இந்தச் சந்திப்பும், அதன் பெறுபேறாக எழக் கூடிய விடயங்களும் இலங்கைக்குப் பாரதூரமான தாக்கங்களை – அல்லது விளைவுகளை – ஏற்படுத்தலாம் என நியூயோர்க்கில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

நியூயோர்க்கில் ஐ.நாவின் பொதுச் சபை அமர்வில் பங்கேற்று உரையாற்றுவதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு சென்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# முருங்கன் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



மன்னார், முருங்கன் கட்டையடம்பன் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் முந்தல் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

முந்தல், கொத்தாந்தீவு கொலனியைச் சேர்ந்த பாருக் முகம்மது தில்ஷான் (வயது 20) எனும் இளைஞரே, இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தேங்காய் கொள்வனவு செய்வதற்காக கொத்தாந்தீவு கொலனி மற்றும் பெருக்குவற்றான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இருவர், சிறிய ரக லொறியொன்றில் நேற்றுமுன்தினம் இரவு, மன்னாரை நோக்கிச் சென்றுள்ளனர். இந்த லொறி மன்னார் முருங்கன் கட்டையடம்பன் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால் லொறி, வீதியைவிட்டுவிலகி வீதியோரத்தில் இருந்த சிறிய கம்பத்துடனும், எதிரே வந்த டிப்பர் ஒன்றுடனும் மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த லொறியில் பயணித்த இருவரும்விபத்தில்காயமடைந்த நிலையில்முருங்கன்வைத்தியசாலையில் உடனடியாக சேர்க்கப்பட்டனர்.

எனினும், லொறியின் சாரதியான கொத்தாந்தீவு கொலனியைச் சேர்ந்த மேற்படிஇளைஞர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.லொறியில் பயணித்த மற்றையநபர் தொடர்ந்தும் முருங்கன்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்விபத்தில் சிக்கிய சிறியரக லொறியின் முன்பக்கம் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், டிப்பர் வாகனத்துக்கும் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மாணவர்களை மோதிய ஜீப்

முல்லைத்தீவு – உண்ணாப்பிலவு வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் காயமடைந்தனர். அவர்கள் இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள்மீதுஜீப்ஒன்று மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் குடும்பஸ்தர் கடத்தப்பட்டுக் கொலை

யாழ்ப்பாணம்,செப்.20

நல்லூர் பண்டாரக் குளத்தடி மருதவளவுப் பிள்ளையார் கோவில் பகுதியில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் அரை உயிருடன் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ். நாவலர் வீதி அரியாலைப் பகுதியைச்சேர்ந்த செல்வநாதன் பத்மபால சிங்கம் (வயது 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ். நாவலர் வீதி அரியாலைப் பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு நேற்று முன்தினம் இரவு 4 பேர் சென்று அவரை அங்கிருந்து கடத்திச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

கடத்திச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் பண்டாரக் குளப்பிள்ளையார் கோயில் வீதியில் அடித்துப் போட்ட நிலையில் அரை உயிருடன் கிடந்துள்ளார்.

பின்னர் கோவில் பகுதியால் சென்றவர்கள் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்கள்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆர்ப்பாட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்தினால் கடும் நடவடிக்கையாம்!

கொழும்பு, செப்.20

பாடசாலை நேரப் பகுதியில் பாடசாலை மாணவர்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்தும் தரப்பினருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலைமைகளை பாடசாலையின் அதிபரால் கட்டுப்படுத்த முடியாமல் போனால், பொலிஸாரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்த அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரைத் தெளிவு படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் குழுக்கள் பாடசாலையினுள் நுழைந்து கல்விச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் மாணவர்களை ஆர்ப்பாட்டங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கல்வி அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர், இந்த நிலைமையைத் தடுப்பதற்காக கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டதாக அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் , பல்வேறு தரப்பினர்களால் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவது குறித்து அறியக் கிடைத்துள்ளதாகவும் , இதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# மீன்பிடிப் படகு மோதி விபத்து; ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், செப்.20

தொண்டமானாறு கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்று திரும்பியவர் படகை மற்றொரு மீன்பிடிப் படகு கண்மூடித்தனமாக மோதியது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 5.30 மணிக்கு நடந்தது.

இந்தப் படகு விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். படகு முற்றாகச் சேதமுற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவர் ஊரணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோதிய படகு அந்த இடத்தைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.